பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 03 செவ்வாய்க்கிழமை (19.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 266

### ஐ.நா. முகவர் அமைப்புகள் கவலை

# கிளிநொச்சியில் ஆஸ்பத்திரிகள் இயங்குவதில் பெரும் தடங்கல்!

## டீசல் விநியோகம் மூன்றில் ஒன்றாகக் குறைப்பு!!

கொழும்பு, ஓகஸ்ட்19

கிளிநொச்சி மாவட்டத்தில் நகரில் உள்ள வசதிகள் கொண்ட பெரியாஸ்பத்திரியும், ஏனைய பிரதேசங்களில் உள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளும் இயங்குவதில் பெரும் பாதிப்பு-தடங்கல்- ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி சுகாதாரத் திணைக்கத்திற்கு வழங்கப்படும் பிரதான எரிபொருளான டீசல், இந்த மாதத்தில் மூன்றில் ஒரு பகுதியாக குறைக்கப்பட்டதன் விளைவே இது.

மக்கள் இடம்பெயர்ந்து அவசர மருத்துவசேவைகள் அத்தியாவசியமாகத் தேவைப்படும் வேளையில், அவசர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கும் மருந்துகள் பழுதடையாமல் பாதுகாப்பதற்கும் தேவையான மின்சார உற்பத்தியை மேற்கொள்ள டீசல் தேவைப்படுகின்றது.டீசல் விநியோகம் குறைக்கப்பட்டு விட்டதால் இப்போதைய அனர்த்தகாலத்தில் இடர்நிறைந்த வேளையில் வைத்திய சாலைகளில் பணிகள் பெரிதும் பாதிக்கப்படவுள்ளன.

இதுகுறித்து ஐக்கிய நாடுகளின் முகவர் அமைப்புகள் (தமது வாராந்த அறிக்கையில்) (12 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சை வினாத் தாள்கள் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம், ஓக.19

ஜீ.சி.ஈ. (உயர்தர) இரண்டாம் கட்ட பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று விமானம் மூலம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன. இப் பரீட்சைகள் இம் மாதம் 25ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்ட வினாத்தாள்களில் நெடுந்தீவு, நயினா தீவுக்கு உரியவற்றை கடற்படையினரின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாவி ஆஸ்பத்திரி கிளிநொச்சிக்கு மாற்றம்

கிளிநொச்சி, ஓக. 19

மல்லாவி ஆஸ்பத்திரி கிளிநொச்சி ஆஸ்பத்திரி முன்னர் இயங்கிய கட்டடத்தில் இயக்க ஆரம்பித்துள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமாக கோட்டைகட்டிய குளத்துக்கு மாற்றப்பட்டிருந்த இந்த ஆஸ்பத்திரி அப்பகுதியில் ஷெல்கள் வீழ்ந்ததையடுத்து கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியின் பழைய (12 ஆம் பக்கம் பார்க்க)

## மேர்வினை உடன் கைது செய்ய கொழும்பு நீதிமன்றம் உத்தரவு

### பொலிஸ் மா அதிபருக்குமேலதிக நீதிவான் பணிப்பு

கொழும்பு, ஓக. 19

'சிரச' தொலைக்காட்சி சேவையின் படப்பிடிப்பாளர்களின் புகைப்படக் கருவிகளை (கமெராக்களை) பறித்து அராஜகம் புரிந்த சம்பவம் தொடர்பில் தொழில் அமைச்சர் மேர்வின் சில்வாவையும் மற்றும் மூவரையும் உடன் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலிஸ் மா அதிபருக்கு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்பு நிலையச் சுற்றாடல் உயர் பாதுகாப்பு வலயமாகும்!

### அரைக் கிலோமீற்றர் பிரதேசத்தை அறிவிக்க முடிவு

கொழும்பு, ஓக. 19

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும் சப்பிரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைத் தேர்தல்களின் போது ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்தையும் சூழவுள்ள ஐந்நூறுமீற்றர் (அரை கிலோமீற்றர்) சுற்றுப் பிர தேசம் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்படும் எனத் தெரியவருகின்றது.

இலங்கை இராணுவத்தின் சிப்பாய்களை மேலதிகமாக வாக்கெடுப்பு நிலையங்களின் பாதுகாப்பிற்கு அமர்த் துவதன் மூலம் அந்நிலையங்களின் பாதுகாப்பை அதி (12 ஆம் பக்கம் பார்க்க)

## பதவியைத் துறந்தார் பாகிஸ்தான் ஜனாதிபதி தொலைக்காட்சி மூலம் முஷாரப் அறிவித்தார்



இஸ்லாமாபாத், ஓக.19

பாகிஸ்தானில் ஆளும் கூட்டமைப்பின் கடும் அழுத்தங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் முகம் கொடுத்து வந்த ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப், நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதிப் பதவியைத் தாம் இராஜிநாமாச் செய்கிறார் என அறிவித்தார்.

நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றிய அவர், தமது பதவி துறப்புக்கடிதம் இன்று நாடாளுமன்ற சபாநாயகருக்குக் கிட்டிவிடும் என்றும் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றுப் பகுதியில் சிப்பாய் ஒருவர் மரணம்

கொழும்பு,ஓக. 19

அக்கரைப்பற்று, கண்ணகிபுரம் பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தளம் மீது கடந்த சனிக்கிழமை இரவு 9.15 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பீரங்கித்தாக்குதலில் படைத்தரப்பை சேர்ந்த ஒருவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிக்குடா நகர்வை முறியடித்ததாக விடுதலைப் புலிகள் அறிவிப்பு

### 10 படையினர் பலி எனவும் தெரிவிப்பு

வவுனியா,ஓக.19

முழங்காவில், நாச்சிக்குடாப் பகுதியில் இராணுவத்தினரின் முன்நகர்வைத் தாம் முறியடித்ததாக விடுதலைப் புலிகள்அறிவித்துள்ளனர். நேற்றுமுன்தினம் - ஞாயிற்றுக்கிழமை - முழுநாளும் நடைபெற்ற சண்டையின் பின்னர் முன்நகர்வு தடுக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தரப்பு இச் சண்டை குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

சண்டையில் பத்துக்கும் அதிகமான படை (12 ஆம் பக்கம் பார்க்க)

## மின்னல் தாக்கி 4 படையினர் பலி மற்றும் இருவர் காயம்

வவுனியா, ஓக.19

மணலாறு, ஆண்டான்குளம் பகுதிகளில் மின்னல் தாக்கியதில் இராணுவத்தினர் நால்வர் பலியாகினர். மேலும் இருவர் காயமடைந்த நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் படைக்கான பயிற்சி கிளிநொச்சியில் நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி, ஓக. 19

கிளிநொச்சியில் ஆயிரம் பேருக்கான மக்கள் படைக்கட்டுமானப் போர்ப்பயிற்சி நேற்று ஆரம்பமாகியுள்ளது.

தாய் நிலத்தை காக்கவும் மீட்கவும் இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள மக்கள் படையில் முதல்கட்டமாக இணைந்து கொண்ட ஆயிரம் பேருக்கான பயிற்சியே நேற்று ஆரம்பமாகியுள்ளது.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், வர்த்தகர்கள், கூட்டுறவாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்நகர்வு வெற்றி;6 புலிகள் பலி என்று படைத்தரப்பு தெரிவிப்பு

கொழும்பு,ஓக.19

கிளிநொச்சி, நாச்சிக்குடாவில் நேற்று முன்தினம் முழுநாளும் கடும் மோதல்கள் இடம்பெற்றன என்று படைத்தரப்பு அறிவித்துள்ளது.

அதிகாலை 5.30 மணிக்கும் முற்பகல் 10.30 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் இந்த மோதல்கள் இடம்பெற்றன.

இந்தச் சண்டையின் இறுதியில் விடுதலைப் புலிகளின் முன்னரங்குகளைப் படையினர் கைப்பற்றினர் இருபடையினர் கொல்லப்பட்டனர்;11படை (12ஆம்பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இந்திரா பத்மலிங்கம்



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி இந்திரா பத்மலிங்கம் 16.08.2008 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் அன்னம்மா தம்பதியினரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பவளம்மா தம்பதியினரின் மருமகளும், பத்மலிங்கத்தின் (கிளி) அன்பு மனைவியும், கௌரி (கனடா), கஜேந்திரன் (இத்தாலி), வாசுகி (கோண்டாவில்), கௌதமி (சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், சிறிதரன், வசந்தி, மகாதேவன், கோகுலன் ஆகியோரின் அன்பு மாமியும், தர்மிகன், பவித்திரா, அனுசியா, சரண்ஜன், வானதி, மதுஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், திருமதி தவமலர் ஸ்ரீமனோகரன் (கொழும்பு), திருமதி நிர்மலா சிவப்பிரகாசம் (கொழும்பு), திருமதி ஜெயந்தினி சிவராசா (இ.போ.ச, கோண்டாவில்), செல்வி றஞ்சினி (கொழும்பு), செல்வி யோகினி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மநாதன் (கனடா), கணேசலிங்கம் (இத்தாலி), நற்குணநாதன் (குவைத்) ஆகியோரின் மைத்துனியும், திருமதி தர்சினி சுமங்கரன் (லண்டன்), சுதர்சன் (புறூனே), திருமதி காயத்திரி சுதர்சன், செல்வி பிரியங்கா ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2008) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.*
E-Mail - Kgowtha@yahoo.com

தகவல்:
ஐ.பத்மலிங்கம் (கிளி - கணவர்), பிள்ளைகள்.

(77320)

## சின்னப்பு குணரட்ணம்

### (ஓய்வுபெற்ற பணியாளர், இலங்கை மின்சார சபை)



உரும்பிராய் மேற்கைப்பிறப்பிடமாகவும், 50/32, பூமகள் வீதி, அரியாலை மேற்கை வதிவிடமாகவும்கொண்ட சின்னப்பு குணரட்ணம் நேற்று (18.08.2008) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு- நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும், சந்திரராணியின் அன்புக் கணவரும், அனுஷா(முன்பள்ளி ஆசிரியை), அகிஷா, பபிஷா, சிந்துஜன், யதுஷா (மாணவி, யா/கனகரட்னம் ம.வி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சற்குணநாதன்(வலி, கிழக்கு பிரதேச சபை, உரும்பிராய்), ராஜன் மதிச்சந்திரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிரிஷான் (யா/இந்துக் கல்லூரி), ஜதீஷான்(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), றோனிஷா(யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும், சரஸ்வதி, ராசபூமணி, செல்லையா, அருளம்பலம், காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகராசா, யோகராசா (யாழ்.மாநகரசபை, பொது கணக்காய்வாளர் பகுதி), தர்மராசா(சுவிஸ்), காலஞ்சென்ற ஆனந்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.08.2008), செவ்வாய்க்கிழமை ந.ப 12மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*50/32, பூமகள் வீதி,*
*அரியாலை மேற்கு.* (77315)

தகவல்:
குடும்பத்தினர்.


## SRI LANKA RED CROSS SOCIERTY

The under mentioned professionals need to be recruited for project implantation

| POST | QUALIFICATION & EXPERINCE | DUTIES & RESPONSIBILITIES |
|---|---|---|
| COMMUNITY MOBILISERS (02POSITION) | A mature personality with a diploma / degree related to Sociology or SocialScience. At least 3 years experience in development /construction activities with the public sector non governmental organizations or international agencies will be required | •He / She should work closely with the project team. The person will perform the role of a facilitator to catalyze selected urban communities towards self-reliance and to evolve their own processes for reconstructing their communities. |
| Jaffna | | •He/She will assist communities in social organization: such as forming community development councils: managing such community-based organizations to initiate community action planning and to implement community contracts and housing reconstruction programmes. |
| Job Ref. # HRM195 | Experience in working with communities will be a significant qualification | |
| Duration | Six Months may be extended for another six months | •Should have the ability to advise communities on participatory processes. |

**Salary – Attractive**

Other Requirements for the above position

High Degree of Computer literacy inter personal skills effective communication and management skills, a good knowledge of English and ability to work independently is essential.

The community mobilisers should have an excellent command of Sinhala or Tamil, with a good knowledge of English. Age below 45 years for all positions.

Red Cross is an equal opportunity employer.
Only the short listed candidates will be contacted for the interviews
Applications should be submitted not later than 29th September 2008 to:

**Branch Executive Officer,**
**Sri Lanka Red Cross Society,**
**73, Kandy Road Jaffna**

**Please quote the job reference # and the post you are applying for on top left-hand corner of the envelope.**


# பிரதேச செயலரின் அனுமதியுடனேயே ப.நோ.கூ. சங்கங்கள் சிமெந்து விநியோகம்

குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு பல நோக்கு கூட்டுறவுச் சங்கங் களுக்கு வழங்கப்பட்டுள்ள சிமெந்தை பிரதேச செயலரின் அனுமதியுடன் பொது மக்களுக்கு விநியோகிக்கவேண்டும்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மேற் கண்டவாறு அறிவுறுத்தியுள்ளார்.

கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள சிமெந்து ப.நோ.கூ.சங்கங்களுக்கு பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் வீடுகளை புனரமைக்க, மலசலகூடம் அமைக்கத் தேவையான சிமெந்தை கிராம சேவையாளின் சிபார்சுடன் பிரதேச செயலர்களின் அனுமதியுடன் ப.நோ.கூ. சங்கங்களில் பெறலாம்.

இந்தநடைமுறையைப் பின்பற்றி விநியோகத்தை சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும் - என்று அரச அதிபர் அறிவித்துள்ளார்.

## தவறிவிட்டது

பாலாவோடை வீதி, காரைநகர் எனும் முகவரியுடைய காசிப்பிள்ளை புஸ்பராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (721011259V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய சட்டைப் பை (IC கவர்) கோண்டாவிலுக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. (பலாலீ வீதியில்) கண்டெடுத்தவர்கள் கோண்டாவில் கிழக்கு, பலாலி வீதியில் உள்ள "கணபதி ஸ்ரோர்ஸ்"ல் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## காணவில்லை

15.08.2008 முதல் சிவப்பு நிற S.P எனக் குறியிடப்பட்ட பசு மாடு ஒன்றைக் காணவில்லை. இதைக் கண்டவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**30, யாழ். வீதி, (பெருமாள் கோயில் முன்) யாழ்ப்பாணம். T.P.060 221 7987**

## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்கு அருகாமையில் 05 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- திரு A.பற்றிக் T.P: 021 222 5380

## தவறிவிட்டது

கற்பகப் பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம் என்னும் முகவரியுடைய சிவசம்பு சிவரஞ்சன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (852162759V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.


ராஜா 2 யாழ்ப்பாணம்

60 ஆவது நாளை நோக்கி
20 வரை சகல
வகுப்புகளுக்கும் அரைக் கட்டணம்
கமல்ஹாசன், அசின்
தசாவதாரம்



காட்சிகள் 10.30–2.00


## முச்சக்கரவண்டி தேவை

நல்ல பாவனையிலுள்ள (One hand owner விரும்பத்தக்கது) முச்சக்கர வண்டி சொந்தப்பாவனைக்கு தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி J.E.Rajanayagam
தொ.பே.இல.0713056265
அலுவலக நேரம் 021 222 7964
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
கண்டி றோட், யாழ்ப்பாணம்.

## கலைவிழா

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின். ஏற்பாட்டில் உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி கலைவிழா இன்று பிற்பகல் ஒருமணிக்கு சங்கானை நிரஞ்சனாஸ் திரையரங்கில் இடம் பெறவுள்ளது.

பிரதேசசபையின் செயலாளர் க.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராக்கலந்து கொள்வார்.

## உடன் விற்பனைக்கு

முட்டை இடும் (வெள்ளை மற்றும் சிவப்பு நிற) பேட்டுக் கோழிகள் மொத்தமாக உடன்விற்பனைக்குண்டு.

தொடர்பு:- ரஞ்சன்
15/9, பொற்பதி வீதி, முதலாம் லேன்,
கொக்குவில் கிழக்கு.
பார்வையிடும் நேரம் காலை 9.00 - 4.00 மணிவரை

# உளமார வாழ்த்துகின்றோம்.

## திரு.பரஞ்சோதி பிரபாகர்

### (M.A. in Regional Planning)



யாழ்ப்பாணம், காணிமாவட்டபதி வகத்தில் காணிப்பதிவாளரும், மேலதிக மாவட்டப் பதிவாளருமாகப் பணியாற்றும் திரு.பரஞ் சோதி பிரபாகர் அவர்கள் பிராந்திய திட்டமிடலில் முதுகலைமாணிப் பட்டப்படிப்பினை சிறப்புத் தரத்தில் சித்தி எய்தியமையை மனமாரப் பாராட்டுவதோடு, மென்மேலும் உயர்வுகள் பெற உளமார வாழ்த்துகின்றோம்.

உதவிப்பதிவாளர் நாயகமும், காணிமாவட்ட பதிவக அலுவலர்களும், வைத்தியப் பதிவாளர்களும், கிராமியப் பதிவாளர்களும்.

# மரண அறிவித்தல்

## செபஸ்ரி ஜேக்கப்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், குளமங்கால், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரி ஜேக்கப் 17.08.2008 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்காளான செபஸ்ரி - ஆனாச்சி தம்பதியினரின் அன்பு மகனும், பாக்கியத்தின் அன்புக் கணவரும், குணசீலன், குணவதி, ஜெயசீலன், இரட்ணசீலன், இராஜன், ஜெயவதி, புனிதவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*குளமங்கால்,*
*மல்லாகம்.* (77319)

தகவல்:
மனைவி.


வசீகர தோற்றத்திற்கு
சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)



யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா' சகல பார்மஸிகளிலும்

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு
மாபெரும் மெகா ஸ்பெஷல்
Pentium 4
17" Dell Black Moniter,Intel Mother Board, Intel Processor 1.6, 256 Ram, 32 MB VGA Card, Silver,Black Casing CD ROM,40GB Hard Disk, Keyboard & Optical Mouse
ரூபா 22,750 மட்டுமே



மாபெரும் இச்சலுகை 16 தொடக்கம் 20ம் திகதி மட்டுமே!
திருமுருகன் கொம் நெற்

MANOJ EXPRESS
யாழ். - கொழும்பு
விமானசேவை



22.08.2008, 26.08.2008
ஒரு வழிப் பயணச் சீட்டு
8000/=
மேலும் தொடர்ந்து வரும்
சேவைகளுக்கு கழிவுகள் வழங்கப்படும்.
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்
உள்நாட்டு, வெளிநாட்டு பார்சல் சேவை குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: Ram Com
No.06, New Market, Hospital Road, Jaffna. T.P : 021 222 8428.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் அதிவேக மனிதன் உசைன் போல்ட்!



ஒலிம்பிக்கில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட 100 மீற்றர் ஓட்டத்தில்ஜமெய்க்காவின் உசைன் போல்ட் தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். மின்னல் வேகத்தில் பறந்து இவர் 9.69 விநாடிகளில் உலக சாதனையும் படைத்தார்.

கடந்த சனிக்கிழமை நடந்த ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் உசைன் போல்ட், அசபா பாவல், டைசன் கே ஆகியோரிடையே கடும் போட்டி காணப்பட்டது.

முதலில் நடந்த அரையிறுதியில் அமெரிக்காவின் டைசன் கே. 10.05 விநாடிகளில் ஓடி ஐந்தாவது இடமே பெறமுடிந்தது. இதையடுத்து உலக சம்பியனான இவர் இறுதிச் சுற்றில் பங்கேற்கும் வாய்ப்பை பரிதாபமாக இழந்தார்.

டைசன் வெளியேறியதைத் தொடர்ந்து ஜமெய்க்காக வீரர்களான உசைன் போல்ட், அசபா பாவல் மற்றும் அமெரிக்காவின் வோல்டர் டிக்ஸ் இடையே முதலிடம் பெறுவதில் போட்டி நிலவியது. விறுவிறுப்பான இறுதிச் சுற்றில் 21 வயதான உசைன் உட்பட 8 பேர் பங்கேற்றனர்.

உலகில் அதிவேக வீரரை நிர்ணயிக்கும் ஓட்டம் என்பதால் பதற்றம் எகிறியது. ஓட்டம் தொடங்கியதும் போட்டோ பினிஷ் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் புயல் வேகத்தில் ஓடிய போல்ட், கண் இமைக்கும் நேரத்தில் 100 மீற்றர் தூரத்தை கடந்தார். இவருக்கு அருகில்கூட யாரும் வரவில்லை. போட்டித் தூரத்தை 9.69 விநாடிகளில் கடந்த இவர் தங்கப்பதக்கம் வென்றதோடு, தனது முந்தைய சாதனையையும் முறியடித்தார்.

முன்னதாக இவர், கடந்த மே மாதம் 9.72 விநாடிகளில் கடந்ததே சாதனையாக இருந்தது. தற்போது 0.03 விநாடிகள் வித்தியாசத்தில் தனது சாதனையை தகர்த்துள்ளார். மின்னல் வேகத்தில் ஓடிய இவர் ''லைட்னிங் போல்ட்'' என்ற தனது புகழை தக்கவைத்துக்கொண்டார்.

இரண்டாவது இடத்தைப் பெற்ற டிரினிடாட்டு பாகோவின் ரிச் சர்ட் தொம்சன் (9.89 விநாடி) வெள்ளி வென்றார். அமெரிக்காவின் வோல்ட் டிக்ஸ் (9.89 விநாடி) வெண்கலம் பெற்றார். ஜமெய்க்காவின் அசபா பாவல் (9.95) 5ஆவது இடமே பெறமுடிந்தது. முதலிரண்டு இடங்களையும் கரீபிய மண்ணைச் சேர்ந்தவர்கள் பெற்றதன் மூலம் தடகளத்தில் அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு பலத்த அடி விழுந்துள்ளது. (50)

# 'நடைராஜா'




20 கிலோ மீற்றர் நடைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற ரஷ்ய வீரர் வலாரி போஷின்.



100 மீற்றர் 'பட்டர்பிளை' போட்டியில் மைக்கல் பெல்ப்ஸ் வெற்றி பெற்றதற்கு எதிராக சேர்பியா,ஒலிம்பிக் சபையிடம் புகார் தெரிவித்துள்ளது.

ஆண்களுக்கான 100 மீற்றர் 'பட்டர்பிளை' நீச்சல் போட்டியில் மைக்கல் பெல்ப்ஸ் வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தை வென்றார். எனினும் அவர் இந்தப் போட்டியில் 0.01 விநாடியில் மட்டுமே வெற்றி பெற்றார்.

சேர்பியாவைச் சேர்ந்த மிலோராட் கவிக், மயிரிழையில் தங்கப் பதக்கத்தை வெல்லும் வாய்ப்பைத் தவற விட்டார். இருவருக்குமிடையிலான நேர வித்தியாசம் மிக மிகக் குறைவென்பதால் பெல்ப்ஸின் வெற்றியை எதிர்த்து சேர்பியா சார்பில் அதிகார பூர்வமாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

பெல்ப்ஸ் முதலில் வெற்றிக் கோட்டைத் தொட்டாரா? அல்லது சேர்பிய வீரர் முதலில் வெற்றி கோட்டை தொட்டர்ரா?என்பதை மறுபரிசீலனை மூலம் உறுதி செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

## பணத்துக்காக நீந்தவில்லை!

பீஜிங்கில் 8 தங்கப்பதக்கங்களை வென்ற மைக்கல் பெல்ப்ஸ்சுக்கு இதுவரை குவிந்திருக்கும் பணத்தொகை இலங்கை மதிப்பில் 13 ஆயிரத்து 500 கோடி ரூபாய்.

ஆனாலும் தாம் பணத்துக்காக ஒருபோதும் நீந்தியதே கிடையாது என்று சாதாரணமாகக் கூறுகின்றார் இந்த நீச்சல் ஜாம்பவான்.

அவருக்கிருந்த உடற்க் குறைபாடு ஒன்றைப் போக்க, டாக்டர்கள் ஆலோசனை கூறியதால் நீச்சலில் தீவிரம் காட்ட ஆரம்பித்தார். அதுவே நாளடையில் பந்தய நீச்சலில் வீரராக அவரை மாற்றியது. அன்றிலிருந்து அவர் உலகின் எந்தப் பகுதியில் முக்கிய நீச்சல் பந்தயம் நடந்தாலும் கவனத்தை செலுத்த ஆரம்பித்துவிடுவார்.

''எனக்கும் என்னை பயிற்றுவிக்கும் பாப் பௌமேனுக்கும் பணம் முக்கியமல்ல; பணம் சம்பாதிக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் நாங்கள் வேறு விளையாட்டைத் தேர்ந்தெடுத்திருப்போம். என்னுடைய இலட்சியம் எல்லாம் நீச்சல் போட்டிகளின் முறையையே மாற்றி அமைப்பதுதான்'' என்று கூறினார் பெல்ப்ஸ்.

''அமெரிக்காவில் வாழும் குழைந்தைகள் எளிதாக நீச்சல் போட்டிகளில் பங்கேற்கத் தேவைப்படும்எல்லா உதவிகளையும் அளிப்பதே நோக்கம்'' என்றும் அவர் சொன்னார்.

# மரதனில் சாதித்தார் ருமேனியத் தாய்!



ஒலிம்பிக் மகளிருக்கான மரதன் சாம்பியன் பட்டத்தை ருமேனிய வீராங்கனை கொன்ஸன்ரீனா டமஸ்கு (வயது - 38) கைப்பற்றினார்.

இவருக்கு ஒரு குழந்தை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பீஜிங்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மரதன் போட்டியில் 2 மணி, 26 நிமிடம் 44 விநாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பிடித்தார் டமஸ்கு.

ருமேனியாவைச் சேர்ந்த ஒருவர் மரதன் போட்டியில் தங்கப் பதக்கம் வெல்வது இதுவே முதல்முறை.

கென்ய வீராங்கனை காத்தரின் டெரிபா இரண்டாம் இடத்தையும் (2மணி, 27 நிமிடம், 06 விநாடி), சீனாவின் ஜோவ் சன்ஜியு ( 2 மணி, 27 நிமிடம், 07 விநாடி) மூன்றாம் இடத்தையும் பிடித்தனர். 82 பேர் கலந்து கொண்ட போட்டியில் 69 பேர் இலக்கை கடந்தனர்.

உலக சாதனையாளர் பிரிட்டனின் பாவ்லா ராட்கிளிப் 23 ஆவது இடத்தையே பிடிக்க முடிந்தது. போட்டியின் இடையே இடது காலில் அவருக்கு தசைப் பிடிப்பு ஏற்பட்டது. அதனால் அவ்வப்போது சிறிய ஓய்வும் எடுக்க வேண்டியதாயிற்று. என்றாலும் இலக்கை 2 மணி 32 நிமிடம் 38 விநாடிகளில் கடந்து 23ஆவது இடத்தைப் பிடித்தார். (50)

## வில்லியம்ஸ் ஜோடிக்கு தங்கம்



பெண்களுக்கான இரட்டையர் பிரிவு டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் வில்லியம்ஸ் சகோதரிகள் தங்கப்பதக்கம் வென் றனர். நேற்று முன்தினம் நடை பெற்ற இறுதிப் போட்டியில் செரீனா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ் ஜோடி ஸ்பெயினின் டியோ அனபெல், ரியோனோ பஸ்குவல் ஜோடியை 62, 60 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தியது. இதன்மூலம் வில்லியம்ஸ் ஜோடி ஒலிம்பிக்கில் இரண்டாவது முறையாகவும் தங்கப்பதக்கம் வென்றது. இதற்கு முன்னர் கடந்த 2000ஆம் ஆண்டு நடைபெற்ற சிட்னி ஒலிம்பிக்கில் இந்த ஜோடி தங்கப் பதக்கம் வென்றது. (50)

# அதிவேக வீராங்கனை ஷெல்லி பிரேசர்

பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் அதிவேக வீராங்கனை யார் என்பதைத் தீர்மானிக்கும் 100 மீற்றர் போட்டியில் ஜமெய்க்கா வீராங்கனை ஷெல்லி ஆன் பிரேசர் முதலிடத்தைப் பிடித்தார்.

அவர் 10.78 விநாடிகளில் இலக்கை எட்டி, தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். மற்றைய 2 இடங்களையும் ஜமெய்க்காவைச் சேர்ந்த வீராங்கனைகளே தட்டிச் சென்றனர்.

ஷெரோனி சிம்சன், கெரான் ஸ்டீவர்ட் ஆகியோர் தலா 10.98 விநாடிகளில் இலக்கை ஒன்று போலக் கடந்து வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றனர். 'போட்டோ பினிஷ்' உட்படப் பல தொழில் நுட்பங்கள் இது மாதிரி யான முக்கிய போட்டிகளில் செயல் படுத்தப்படும் போது சிம்சனையும், ஸ்டீவர்டையும் அதிகாரிகள் பதிவிலிருந்து பிரிக்க முடியவில்லை. இது மிகவும் அபூர்வமான நிகழ்வு என அவர்கள் தெரிவிக்கின்றனர். அதனால் இருவருக் கும் வெள்ளிப் பதக்கம் வழங்க முடிவு செய்யப்பட்டது.



**வெண்கலப் பதக்கம் கிடையாது**

1912 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரே நாடு முதல் மூன்று இடங்களையும் 100 மீற்றர் பிரிவில் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

(நேற்று மாலை வரையானது)


| நிலை | நாடு | தங். | வெள். | வெண். | மொ. |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 35 | 13 | 13 | 61 |
| 2 | அமெரிக்கா | 19 | 21 | 25 | 65 |
| 3 | பிரிட்டன் | 11 | 7 | 8 | 26 |
| 4 | ஆஸ்திரேலியா | 10 | 10 | 12 | 32 |
| 5 | ஜேர்மனி | 9 | 6 | 6 | 21 |
| 6 | வடகொரியா | 8 | 9 | 5 | 22 |
| 7 | ஜப்பான் | 8 | 5 | 7 | 20 |
| 8 | ரஷ்யா | 7 | 12 | 12 | 31 |
| 9 | இத்தாலி | 6 | 6 | 6 | 18 |
| 10 | உக்ரைன் | 5 | 3 | 6 | 14 |
| 11 | பிரான்ஸ் | 4 | 9 | 13 | 26 |
| 12 | ருமேனியா | 4 | 1 | 3 | 8 |
| 13 | ஸ்பெஜின் | 3 | 3 | 1 | 7 |
| 14 | சுலோவாக்கியா | 3 | 1 | 0 | 4 |
| 15 | நெதர்லாந்து | 2 | 4 | 4 | 10 |
| 16 | போலந்து | 2 | 3 | 1 | 6 |
| 17 | செக் | 2 | 3 | 0 | 5 |
| 18 | ஜமெய்க்கா | 2 | 2 | 0 | 4 |
| 19 | கனடா | 2 | 1 | 4 | 7 |
| 20 | தென்கொரியா | 2 | 1 | 3 | 6 |
| 21 | நியூசிலாந்து | 2 | 1 | 2 | 5 |
| 22 | எதியோப்பியா | 2 | 1 | 0 | 3 |
| 23 | டென்மார்க் | 2 | 0 | 3 | 5 |
| 24 | சுவிற்சர்லாந்து | 2 | 0 | 3 | 5 |
| 25 | ஜோர்ஜியா | 2 | 0 | 1 | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில்
14 . 08 . 1981

முருகன் பாதத்தில்
31 . 08 . 2007



### நடராசலிங்கம் கேமளன் (மயூரன்)

*(புடைவைக்கடை உரிமையாளர்)*

திதி : திருதியை (19.08.2008)

மனத்தினால் மறக்கொணாத
மதிப்புயர் மாண்பின் மயூராவே
இனத்திேனார் இணைந்தோர் ஏத்தும்
என் இனிய தலைவனே
நினைத்த எங்கள் நிலையென் செல்வம்
நினைவுற நிறுத்தும் அப்பாவே
செல்வச் செழிப்புடன் வாழ்ந்த உன் உயிரை
மாய்த்ததோ தீய சக்திகளின் துப்பாக்கி
கனத்துமிங் கழவும் விட்டு
கடந்துமோ ராண்டோ ஐயனே

நிரந்தர முகவரி:
*சிவன் கோயிலடி*
*எழுதுமட்டுவாழ்.*

தற்காலிக முகவரி:
*கண்டுவில் லேன்,*
*சாவகச்சேரி.*

குடும்பத்தினர்.

(77185)

## ஆனைக்கோட்டை வயல்களில் நெற்செய்கைக்கு ஆயத்தம்

நவாலி,ஒக.19

நவாலி,ஆனைக் கோட்டை, கல்லுண்டாய் பகுதி வயல்களில் பெரும்போகச் செய்கைக்கு முன்னேற்பாடாக வயல் காணிகளில் குப்பைகளைக் கொட்டும் வேலைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

பெரும்போகநெற் செய்கையை மேற்கொள்வதற்காக வயல்களை உழுது பண்படுத்துவதுடன் வரம்பு வாய்க்கால்கள் அமைக்கப்படுவதையும் காணாக் கூடியதாக உள்ளது.

கடந்த வருடம் சகல விவசாயிகளுக்கும் அதிக விளைச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து இம்முறை செய்கை பண்ணப்படாமல் தரிசு நிலங்களாக இருந்த சகல வயல் நிலங்களையும் செய்கை பண்ணுவதற்காக தயார்ப்படுத்தி வருகின்றனர். (202-100)

### கூட்டம் ஒத்திவைப்பு

தெல்லிப்பழை ஒக.19

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இன்று நடைபெற விருந்த பிரதேச சபை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக உதவித் திட்டமிடப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி கலைஒளி வீதி, அருள்மிகு அண்ணமார் அம்மன் ஆலய புனரமைப்புக்கு நிதி உதவி வழங்கிய வடமாகாண விசேட செயலணித் தலைவரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலதிபருமான

கௌரவ

திரு.க.ந.டக்ளஸ் தேவானந்தா

அவர்களையும் வலி.கிழக்கு அச்சுவேலி அமைப்பாளர் திரு.தர்மராசா அவர்களையும் யாழ்.மாவட்ட அமைப்பாளர் திரு.உதயன் அவர்களையும் எமது ஆலய பரிபாலன சபையினர் பாராட்டி நன்றி தெரிவித்து வாழ்த்துகின்றனர்.

*சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி,*
*கலைஒளி வீதி.*

ஆலய பரிபாலன சபையினர்.

## மரண அறிவித்தல்

### *சிதம்பரப்பிள்ளை சின்னத்துரை*



வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சின்னத்துரை 15.08.2008 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கருணை கலானந்தமலரின் அன்புக் கணவரும் வ.சிதம்பரப்பிள்ளை - நாகி தம்பதியரின் அன்பு மகனும் க.ஆழ்வாப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் அனுஷா, சியாமளா, விஷ்ணுபிரசாத், தினேஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சி.தனபாலசிங்கம், திருமதி மு.அன்னம்மா ஆகியோரின் சகோதரனும் ஆ.கந்தசாமி (ஜேர்மனி, கணபதிப் பிள்ளை (லண்டன்), தங்கராசா (லண்டன்), திருமதி க.தவமணி (பிரதேச செயலகம், சாவகச்சேரி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.08.2008) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெறும்.

*வரணி,*
*இயற்றாலை.*

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## *வின்சன் டிபோல் பிலோமினா (பேபி)*



கடற்கரை வீதி, பருத்தித்துறையை நிரந்தர முகவரியாகக் கொண்ட வின்சன் டிபோல் பிலோமினா (17.08.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கஷ்மீர் – றோசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் - பெர்ணதேத்தம்மா தம்பதியரின் மருமகளும் வின்சன் டிபோல் (கிராம அபிவிருத்திச் சங் கத் தலைவர், பருத்தித்துறை கிழக்கு, புனித தோமையார் ஆலய அருட்பணிச்சபைப் பொருளாளர், மந்திகை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர், ஹாட்லி பழைய மாணவர் சங்க உப தலைவர், சென்.தோமஸ் பெண்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்) அவர்களின் அன்பு மனைவியும் அலெக்ஸ்போல் (பிரான்சிஸ் ரேடஸ், பருத்தித்துறை), ஜோயிஸ்போல் (கனடா), றொபேட் போல், ஜேக்கப்போல் (கனடா), பீற்றர் போல் (லண்டன்), எட்மன்போல் (வின்சன் நியூரேடர்ஸ், கொழும்பு) றெக்ஸ்போல் (வின்சன் ரேட்ஸ் சென்ரர், பருத்தித்துறை), டக்ளஸ்போல் (பிரான்சிஸ் றேடர்ஸ், யாழ்ப்பாணம்), மேரி டிலாந்தி ஆகியோரின் பாசமிகு தாயும் மேரி யூடிற்றா, சுதர்சினி, வசந்தகுமாரி, நிறஞ்சனா, சிந்துஜா, ரோகினி, ராஜி, கிறிஸ்ரியன் ஆகியோரின் அன்பு மாமியும் றைஷன்போல், றைஷாஜினி, பிறின்ஷா, றனுஷன்போல், லீஷா, சின்சியா, றொக்ஷிகா, றொக்ஷன்போல், பிறின்சிகா, சுஜேபோல், றெவின்போல், மேரிடிஷானி, மேரிதொம்சிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2008) செவ்வாய்க்கிழமை பி.ப.2.30 மணிக்கு புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கோரியடி சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

*'றோஸ்கொட்,'*
*கடற்கரை வீதி, பருத்தித்துறை.*
*T.P. 2263129*

தகவல்:
குடும்பத்தினர்.

(77281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஓக.19

இளவாலை கூத்துமலைஒடை பால விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 6.05 மணி தொடக்கம் 7.45 மணி வரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பக்தர்களின் எண்ணெய்க் காப்புச்சாத்துதல் இடம்பெறும். (202)

## புலோலி வேலாயுதம் ம.வியின் மாடிப்படிகளுக்கு இரும்புக் கதவுகள்

வடமராட்சி,ஓக.19

பருத்தித்துறை புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்திலுள்ள மாடிப்படிகளின் நுழைவாயிலுக்கு இரும்புக் கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன.

வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் இக் கதவுகளை செய்து கொடுத்துள்ளது.

மாணவர்களின் பாதுகாப்பு நலன்கருதி அமைக்கப்பட்டுள்ள இந்த இரும்புக் கதவுகளை அமைப்பதற்கென பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி சபா. இரவீந்திரன் 27 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார். (202-236)

## கற்கோவளத்தில் மக்கள் கடை

மந்திகை,ஓக.19

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கற்கோவளம் புனித நகரில் ''மக்கள் கடை'' ஒன்றைத் திறந்து வைத்துள்ளது.

இப்புதிய மக்கள் கடையைச் சங்க இயக்குநர் சபைத் தலைவர் என்.கணேசலிங்கம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இதுவரை காலமும் கற்கோவளம் சனசமூக நிலையக் கட்டடத்தில் இயங்கி வந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கற்கோவளக் கிளையும் அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட நிக்கொட் நிறுவன பொது மண்டபத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வியாபாரிமூலையில் அழகு சாதனப் பொருள்கள் விற்பனை நிலையமொன்றையும் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (202-218)

# குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு சிறில் எம்.பி. 6 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்தார்

யாழ்ப்பாணம், ஓக.19

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் குடாநாட்டிலுள்ள பல்வேறு பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளுக்கென 6 லட்சத்து 15 ஆயிரம் ரூபா நிதி வழங்கியுள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதியிலிருந்து இந்த ஒதுக்கீட்டைச் செய்துள்ளார்.

வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் ஆலயப் புனரமைப்புக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் பருத்தித்துறை சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் சனசமூக நிலைய கலாசார புனரமைப்புக்கும் 75 ஆயிரம் ரூபாவும் பருத்தித்துறை புனித தோமஸ் சனசமூகநிலைய கட்டட புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபாவும்-

வல்வெட்டித்துறை றோ.க.த.க பாடசாலைக்கு தளபாடக் கொள்வனவிற்கு 40 ஆயிரம் ரூபாவும் பண்டத்தரிப்பு புனித யாகப்பர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு தளபாடம் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு ஒரு லட்சம் ரூபாவும்-

மானிப்பாய் கரையாம்பிட்டி சேமக் காலையின் திருத்த வேலைகளுக்கு 75 ஆயிரம் ரூபாவும் ஆனைக்கோட்டை உயரப்புலம் அடைக்கலநாயகி முன்பள்ளிக்கு தளபாடக் கொள்வனவிற்காக 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202-51)




தென்மராட்சிப் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தினால் 2007 ஆம் ஆண்டு ஜீ.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் முதன்மைச் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன் மாணவன் ஒருவருக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கின்றார்.

மகங்கள் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் க. கண்முகலிங்கம், சமாசத் தலைவர் அ. திருநாவுக்கரசு ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: தென்னவன்)

## வீதியில் நின்று பெண்களுக்குத் தொல்லை கொடுத்தாக 7 இளைஞர்கள் கைதாகி நீதிமன்றத்தில் ஆஜர்

மந்திகை, ஓக.19

வீதியால் செல்லும் பாடசாலை மாணவிகள், இளம் பெண்களுக்குத் தொல்லை கொடுத்து இம்சைப்படுத்தி வந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஏழு இளைஞர்கள் பருத்தித்துறை நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நெல்லியடிப் பொலிஸார், இந்த ஏழு இளைஞர்களும் வீதியால் செல்லும் பாடசாலை மாணவிகள், இளம் பெண்களுக்குத் தொல்லை கொடுத்து இம்சைப்படுத்துவதாகக் குற்றஞ்சாட்டி பருத்தித்துறை நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி கே. அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நீநிபதி ஏழு இளைஞர்களையும் எதிர் வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுகளில் வீதிகளால் செல்லும் மாணவிகள், இளம் பெண்களுக்குத் தொல்லை கொடுத்து இம்சைப்படுத்தும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இவைகளைத் தடை செய்வதற்காக வீதிகள், ஒழுங்கைகளில் நின்று இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜராக்குமாறும் பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். (202-218)

## வடமராட்சி கிழக்கில் பொலிஸ் நடமாடும் சேவை

மந்திகை,ஓக.19

வடமராட்சி கிழக்கு குடத்தனையில் பருத்தித்துறைப் பொலிஸார் நடமாடும் சேவையொன்றை நடத்தினர்.

குடத்தனையில் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனை முன்னர் இயங்கிய கட்டடத்திலேயே இப் பொலிஸ் நடமாடும் சேவை இடம்பெற்றது.

பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.லியனகே தலைமையில் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பண்டார உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களான எஸ். ஹெட் டியாராட்சி, கே. மல்லசேகர உட்பட பொலிஸார் அடங்கிய பொலிஸ் குழு சேவையை வழங்கியது.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் எம். ஸ்ரீஸ்கந்தகுமார், பிரிவு கிராம சேவை அலுவலர்களும் இச் சேவையின்போது சமுகமளித்திருந்தனர். இச் சேவையின்போது காணிப் பிரச்சினைகள், ஆள் பதிவுத் திணைக்கள அடையாள அட்டைகள் தொலைத்தவர்களுக்கான நடவடிக்கைகள், சி.டி.எம்.ஏ தொலைபேசி பாவனையாளர்களுக்கான நடவடிக்கைகள், பொலிஸ்தடை நீக்கப் பத்திரங்கள் பற்றிய நடவடிக்கைகள், சிறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாணல் போன்ற சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்பகுதி மக்களுக்குத் தேவை ஏற்படின் மீண்டும் இப் பகுதியில் பொலிஸ் நடமாடும் சேவை நடத்தப்படுமென பருத்தித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (202-218)

## 4 வருடங்கள் சேவையாற்றிய வைத்தியர்களின் விவரங்களை சுகாதார அமைச்சு கோரியுள்ளது

யாழ்ப்பாணம்,ஓக.19

வைத்தியசாலைகள் மற்றும் வைத்திய நிறுவனங்களில் 2008 டிசெம்பர் 31 இல் நான்கு வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்துள்ள வைத்திய அதிகாரிகளின் விவரங்கள் சுகாதார அமைச்சால் திரட்டப்படுகின்றன.

குறித்த விவரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட சுகாதாரத் திணைக்களம் ஆதார வைத்தியசாலைகள் மற்றும் போதனா வைத்தியசாலைகள் ஆகியவைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகளை மத்திய சுகாதார அமைச்சு கோரியுள்ளது. (202-300)

## துன்னாலையில் 20 லட்சம் ரூபா செலவில் கலிகைக் கந்தன் கலாசாரமண்டபம் நிர்மாணிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

துன்னாலையில் ''கம நெகும'' திட்டத்தின் கீழ் 20 லட்சம் ரூபா செலவில் கலாசார மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இக் கலாசார மண்டபத்திற்கு துன்னாலை கலிகைக் கந்தன் கலாசார மண்டபம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இக் கலிகைக் கந்தன் கலாசார மண்டபத் திறப்புவிழா கிராம அலுவலர் கே.பரஞ்சோதி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கலாசார மண்டபத்தைச் சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

வதிரி பூவற்கரை விநாயகராலய பிரதம குரு .சிவஸ்ரீ.ஏ. ரவீந்திரக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். இவ் விழாவிலே வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் எஸ். சத்திய சீலன், யாழ். திட்டமிடல் பணிப்பாளர் கே. குணாளசிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

கலிகைக் கந்தன் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் கே. செல்லத்துரை கிராம மக்களின் தேவைகள் அடங்கிய மகஜரை அரசாங்க அதிபர் கணேஷிடம் கையளித்து நன்றி யுரை நிகழ்த்தினார். (202)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## சண்டிலிப்பாய் பிரதேச முதியவர்களுக்கு அ.அட்டை

நவாலி ஓக.19.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முதியவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன. அடையாள அட்டைகளை பெறவிரும்புபவர்கள் தத்தமது பகுதி முதியோர் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பித்து ஒருவார காலத்தில் அடையாள அட்டை வழங்கப்படும் என பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் அருந்தவராசா தெரிவித்தார். (202-100)

## குருநகரில் வாய்க்கால்கள் பாராமரிப்பின்மையால் குடியிருப்பாளர்களுக்குச் சுகாதாரச் சீர்கேடு

குருநகர்,ஓக.19

குருநகர், றெக்கிளமேசன் பகுதியில் உள்ள வாய்க்கால்கள் சில சரியாகப் பராமரிக்கப்படாமையால் அப்பகுதிக் குடியிருப்பாளர்கள் சுகாதாரச் சீர்கேட்டை அனுபவிக்கின்றனர். றெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதியின் வடக்குப் புறத்தில் அமைந்துள்ள கழிவுகள் செல்லும் வடிகால் இப்பகுதிக் குடியிருப்பாளர்களின் குடியிருப்புகளூடாகவே அமைந்துள்ளது. இவைகளை இக் குடியிருப்பாளர்களின் வீடுகளின் வெளிப்புறத்தில் அமைப்பதற்கு இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் இவ்வடிகாலை சுத்திகரிப்புச் செய்வதில் சுத்திகரிப்பாளர்கள் தினமும் சுத்திகரிப்பு போதியளவு மேற்கொள்ளப்படாமையால் அப்பகுதி மக்கள் சுகாதாரச் சீர்கேட்டை அனுபவிக்கின்றனர்.

எனவே றெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதியின் வடக்குத் திசையில் அமைந்துள்ள இக் கழிவு நீர் செல்லும் வடிகாலை குடியிருப்புக்கு வெளியே அமைக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என குடியிருப்பாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-51)

## பன்னாலை கற்பக விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஓக.19

தெல்லிப்பழை பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. எதிர்வரும் 26 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 28 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் இடம்பெறும். 29 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

## உரும்பிராய் காந்தி முன்பள்ளிக்கு அன்பளிப்பு

நல்லூர்,ஓக.19

உரும்பிராய் கிழக்கு காந்தி சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கவென இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் கிளையினர் 10 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளனர். (202-111)




இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையின் 69 ஆவது ஆண்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

கிளை முகாமையாளர் ஜி.சகாதேவன் உரையாற்றுவதையும் அருகில் உதவி முகாமையாளர் வி.எஸ்.சிவகுமார் மற்றும் வங்கியின் ஏனைய அதிகாரிகள் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

இளைஞர் சேமிப்புக் கணக்கைப் பேணும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி பெறும்போது குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு 30 ஆயிரம் ரூபா பரிசுத் தொகையை இம்முறை பெற்ற நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவி [illegible] குலக்குருக்களுக்கு கிளை முகாமையாளர் பரிசுத் தொகைக்கான காசோலையை வழங்குவதை இரண்டாவது படத்தில் காணலாம். (155)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்.....




யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் யாழ்.பிரதேச செயலகப் பிரிவு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட தையல் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை ள யாழ்.பிரதேச செயலர் ம.ஜெகூ, உதவி திட்டப்பணிப்பாளர் எஸ்.மகேஸ்வரன் ஆகியோர் மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகளிடம் கையளித்தனர்.

கொழும்புத்துறை, பாஷையூர், றெக்கிளமேசன், அரியாலை, சிறாம்பியடி, நாவாந்துறைப் பகுதிகளைச் சேர்ந்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தமக்குரிய தையல் இயந்திரங்கள் மற்றும் தளபாடங்களைப் பெற்றுக்கொண்டனர். (படம்: நம்பி)




தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் சங்கத்தானை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்படும் தையல் பயிற்சி வகுப்பின் ஆரம்பநாள் நிகழ்வில் கழகத் தலைவர் லயன் செ.சரவணமுத்து தையல் உபகரணங்களை சங்கத் தலைவியிடம் கையளிப்பதையும் அருகில் கழக உறுப்பினர்களும் மாதர் சங்க உறுப்பினர்களும் நிற்பதையும் காணலாம். (படம்: தென்னவன்)



நயினாதீவு ஸ்ரீ தில்லைவெளி பிடாரி அம்பாள் ஆலய வேள்வித்தினத்தை முன்னிட்டு நயினாதீவு ஸ்ரீ பிடாரி அம்பாள் சனசமூக நிலையம் நடத்திய 17ஆவது பொதுஅறிவுப் பரீட்சையின் பரிசளிப்புவிழாவும் கலைநிகழ்வுகளும் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி ஆலய அறங்காவலர் சபைத்தலைவர் கா.ஆ.தியாகராஜா கலந்து கொண்டார்.

நிகழ்வில் சேவைநலன்பாராட்டி நயினாதீவு அரசினர் வைத்தியசாலையில் தொடர்ந்து 5 வருடமாக வைத்திய அதிகாரியாக சேவையாற்றிக் கொண்டிருக்கும் கு.சண்முகரெத்தினத்திற்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.




உள்ளூராட்சி வாரக் கொண்டாட்டத்தின் இறுதி நாள் நிகழ்வில் வண்ணார்பண்ணை சைவபரிபாலனசபை மண்டபத்தில் இலவச மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது. நிகழ்வில் மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் உரையாற்றுகின்றார்.



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் 'சுயம்' பெண்களுக்கான [illegible] மையம் அண்மையில் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் திறந்து வைக்கப்பட்டது. நல்லூர் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தயாபரி தொழில் மையக் கட்டடத்தைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (03)




எழுத்தாளர் த.ஆனந்தமயில் எழுதிய 'ஓர் எழுதுவினைஞனின் டயறி' சிறுகதைத் தொகுதியின் அறிமுகவிழா அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் எழுத்தாளர் அ.யேசுராசா உரையாற்றுவதையும் ஐ.சண்முகன், க.அருந்தாகரன் மற்றும் பா.அகிலன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



நயினாதீவு உப - அலுவலகத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வேலணை பிரதேசசபையினால் பிளாஸ்ரிக் வாளிகள் வழங்கப்பட்டன.

டாக்டர் திருமதி ப.இரத்தினலஜி வாளியை முன்பள்ளி ஆசிரியருக்கு வழங்குவதையும் அருகில் பொறுப்பதிகாரி ந.மோகனரூபன், முன்னாள் பொறுப்பதிகாரி ப.பேரின்பநாதன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (95)



கம்பர்மலை மகாவித்தியாலயத்தில் வல்வெட்டித்துறை மக்கள் வங்கியினால் 'சிசு உதான' அலகு திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில் வித்தியாலய அதிபர் சு.கிருஷ்ணகுமார் உரையாற்றுகின்றார்.

வல்வெட்டித்துறை வங்கியின் உதவி முகாமையாளர் த.தர்மரத்தினம், முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன், யாழ்.உதவிப் பிராந்திய முகாமையாளர் சு.ஹென்றி ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: சுந்தா)



சதாவதானி கதிரைவேற்பிள்ளை நினைவுதின விழா மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூகநிலைய முன்றலில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் உரையாற்று[illegible]தை முதலாவது படத்திலும்-

சனசமூக நிலை[illegible]த்தலைவர் கி.குகநாதன் தலைமை உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: கர்ணன்)



'வேள்ட்விசன்' நிறுவன அனுசரணையுடன் விவசாயத் திணைக்களம் வேலணை அம்பிகை நகர் பகுதியில் கொள்கலன் மரக்கறிச் செய்கையை அறிமுகப்படுத்தியது.

விவசாய போதனாசிரியர் செ.இராமநாதன் மரக்கறிச் செடியைப் பயனாளி ஒருவருக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

[illegible] விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், உதவி விவசாயப் பணிப்பாளர் [illegible]ரம், வேலணை பிரதேச செயலக உதவி திட்டப்பணிப்பாளர் திருமதி தி.மீரா, வேள்டவிஷன் நிறுவன இணைப்பாளர் லேனாட் ஆகியோரும் காணப்படுகின்றனர். (படம்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்களுக்கான பதவி உயர்வுகளை வழங்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,ஓக.19

அரச பாடசாலைகளில் கடமைபுரியும் அதிபர்களுக்கு பதவியுயர்வுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

கல்வியமைச்சின் செயலாளர் நிமல்பண்டார இது தொடர்பான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் அதிபர்களின் விபரங்களைச் சேகரிக்குமாறு அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

1999 ஆம் ஆண்டு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த அதிபர் சேவையின் மூன்றாம் வகுப்புக்கு நியமிக்கப்பட்ட அதிபர்கள் சேவையின் இரண்டாம் வகுப்பின் இரண்டாம் தரத்திற்கு பதவி உயர்த்தப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் காணப்படும் அதிபர்களின் வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் அதிபர்களுக்கான பதவியுயர்வுகளை வழங்குவதில் தாமதங்கள் நிலவுகின்றன என தொழிற்சங்கங்களினால் கல்வியமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது இந்நிலையில் இது தொடர்பான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு கல்வியமைச்சின் செயலாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி புலமைப் பரிசிலுக்கு 20 பேர் தெரிவு

அச்சுவேலி,ஓக.19

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 20 மாணவர்கள் சமுர்த்தி "சிப்தொற" இரண்டாம் நிலைக்கல்வி புலமைப்பரிசில் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

புலமைப்பரிசில் பெறும் மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:

லோகநாதன் சஜீவன் (இருபாலை கிழக்கு), பிரான்சிஸ் சுபாஜினி (அச்செழு போயிட்டி), நாகேஸ்வரன் சுஜிதா (அச்சுவேலி தெற்கு), ஸ்ரீ கதிர்காமநாதன் கனோஜா (நல்லூர் வடக்கு), தம்பிராசா மகிழினி (அச்செழு, பூலசிட்டி), குண்டுமணி தமிழினி (மாவடிவீதி, அச்சுவேலி), செல்வராஜா பானுஷன் (ஆவரங்கால் கிழக்கு), சிவனேஸ்வரன் சுவேதா (கோப்பாய் வடக்கு), கனகசபாபதி சசீகரன் (சிறுப்பிட்டி மேற்கு), வராதராஜா சிவோஜினி (ஊரெழு கிழக்கு),

நகுலேஸ்வரன் கிருஷாந்தினி (புத்தூர் கிழக்கு), யோகேஸ்வரன் நிஷாந்தினி (வாதரவத்தை), சிவகணேஸ் சிவகரன் (புத்தூர், நவக்கிரி), தவலிங்கம் சேந்தன் (நீர்வேலி, அச்செழு), புலேந்திரன் சயாணா (பத்தமேனி, அச்சுவேலி), செல்லத்துரை சஞ்சிகா (புத்தூர் கிழக்கு), இராசு தீபன் (வேளாந்தோட்டம், கல்வியங்காடு), நகுலேஸ்வரன் உஷாந்தினி (நீர்வேலி வடக்கு), சோதிநாதன் ஜினோஸ் (புத்தூர், வாதரவத்தை), தபேந்திரன் அகில் (உரும்பிராய் வடக்கு)

இம்மாணவர்களுக்கு ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் இரண்டு வருட காலத்திலும் சமுர்த்தி "சிப்தொற" புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-11)

# பெற்றோர் தமது விருப்பங்களை பிள்ளைகள் மீது திணிக்காது அவர்களது அபிலாஷைகளை அறிந்து கற்பிக்கவேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் மூதறிஞர் சிற்பி

சுன்னாகம்,ஓக.19

மேலைநாட்டவர்கள் ஓசைநயம் மிக்க வார்த்தைகளைச் சிறுவர்களுக்கு பாடல்கள் மூலம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கும்போது தமிழர்கள் பாடல்கள் மூலம் தமது பிள்ளைகளுக்கு அறக்கருத்துகளை வலியுறுத்தினார்கள் - என்று குறிப்பிட்டார் முதுபெரும் எழுத்தாளரும் மூதறிஞருமான சிற்பி சிவசரவணபவன்.

கவிஞர் துரையர் எழுதிய எங்களுக்காக நூல் வெளியூட்டு விழா சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தமதுரையில் மேலும் கூறுகையில்,

பழங்காலத்தில், எப்படி நல்ல வாழ்க்கை வாழவேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பதே கல்வியின் குறிக்கோளாக இருந்தது. அதனால் உயர்ந்த நல்ல கருத்துகளைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். சந்ததி சந்ததியாக ஒரே தொழிலைச் செய்து வந்த காரணத்தால் தொழிலைக் கற்றுக்கொடுக்க வேண்டிய தேவையிருக்கவில்லை. இன்று எல்லோருக்கும் தொழில் தேவையாக உள்ளது. எனவே தொழிற்றுறைசார்ந்து இன்றைய கல்வி உள்ளது.

குழந்தை பிறந்தவுடனேயே அது எப்படி வளரவேண்டுமென்று பெற்றோர் தீர்மானித்து விடுகின்றனர். அதனால் தமது விருப்பங்களைப் பிள்ளைகளில் திணிக்கிறார்கள். பிள்ளைகளை விளையாடப் பெற்றோர் அனுமதிப்பதில்லை. இது தவறானதாகும். விளையாட்டுத் துறையில் அதிகம் கவனஞ்செலுத்தி விளையாடும் பிள்ளை கல்வியிலும் தொழிலும் சிறந்து விளங்கும். எனவே பிள்ளைகளை விளையாட அனுமதிக்கவேண்டும். அத்துடன் பிள்ளைகளின் விருப்பத்தை அறிந்து கற்பிக்கவேண்டும் - என்றார்.

வெளியீட்டுரை நிகழ்த்திய யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் தமது உரையில்-

ஆசிரியரிடத்தில் மட்டும் தங்கியிருந்து கற்ற காலம் ஒன்றிருந்தது. இன்று அது மாறிவிட்டது. நவீன தொடர்புசாதன வசதிகளைப் பிள்ளைகள் பயன்படுத்திக் கற்கத் தொடங்கிவிட்டார்கள். பெரியவர்கள் அவர்களிடத்தில் சில விடயங்களைக் கேட்டறிந்து கொள்ளவேண்டியிருக்கிறது.

ஆசிரியர் சொல்வதை மனப்பாடஞ் செய்து ஒப்புவிக்கும் நிலை மாறி எதையும் தேடிக் கண்டறிந்து கற்கும் நிலை உருவாகியிருக்கிறது. சிறுவர்களது ஆளுமை, சிந்தனை, ஆற்றல் என்பவற்றை மேம்படுத் துவது என்ற கருத்து ஐரோப்பாவில் ஏற்பட்டதைத்



தொடர்ந்தே சிறுவர் இலக்கியம் தோற்றம் பெற்றது. பாரதி முதல் துரையர் வரை பலரும் சிறுவர் பாடல்களை யாத்துள்ளனர். வழக்கிழந்து போன பேச்சுமொழிச் சொற்களைக் கையாண்டு எளிமையான முறையில் இப்பாடல்கள் ஆக்கப்பட்டுள் என என்று குறிப்பிட்டார்.

நூலைப் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் வெளியிட்டு வைக்க பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் வீ.மகாலிங்கம் பெற்றுக்கொண்டார். (ப-38)



'எங்களுக்காக' நூலை யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம், பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் வீ.மகாலிங்கத்திடம் கையளிப்பதையும் நூலாசிரியர் கலாபூஷணம் சு.துரைசிங்கம் நிற்பதையும் படத்தில் காணலாம். (38)

# சண்டிலிப்பாய் பிரதேசத்தில் உதவிக் கொடுப்பனவு பெறுபவர்கள் கவனத்திற்கு

நவாலி, ஓக.19

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசநோய், தொழுநோய், யானைக்கால் நோய் என்பவற்றிற்கான உதவிப்பணம் பெறுபவர்களினதும் கொடுப்பனவுகள் அந்தந்த தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பெற்றுக்கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் அருந்தவராசா கேட்டுள்ளார். (202-100)

# வாசகர் திருமுகம்

## அரச அதிகாரிகளின் தூக்கம் கலையுமா?

அரிசியும் மாவும் எமது மக்களின் ஜீவாகாரங்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் மாவுக்கான தட்டுப்பாடு கடந்த இரண்டு, மூன்று வாரங்களாக உச்ச நிலையில் உள்ளது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் மா மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. கேட்டால் நிவாரணத்திற்கு மட்டும்தான் வழங்கப்படும் என்ற பதில். மற்றவர்கள் மண்ணையா சாப்பிடுவது? ஆனால் தனியார் கடைகளின் பின்வாசல் வழியாக மாமூடைகள் தாராளமாக கைமாறுகின்றன. சிறு மற்றும் பெரு வியாபார நிலையங்களில் ரூபா 110/=இற்கு ஒரு கிலோ மா விற்கப்படுகின்றது. இது எவ்வளவு அநியாயம்.

அதிக விலைக்குப் பொருள்களை விற்றால் கடும் தண்டனை என்று அரச அதிபர் பத்திரிகைகளில் அறிக்கை விடுகின்றார். இதைப்பார்த்து அழுவதா? அல்லது சிரிப்பதா? என்று தெரியவில்லை. ஆனால் வியாபாரிகள் சிரிப்பது தெளிவாகத் தெரிகின்றது. அவர்கள் காட்டில்தானே இப்போது மழை பெய்கின்றது. அவர்களைக் கட்டுப்படுத்த எவருமில்லை. அவர்கள் சிரிக்காமல் என்ன செய்வார்கள்.

இந்த உயர் அதிகாரிகள் மக்களின் கீழ்மட்டத் தேவையான மாவினைக்கூட வரவழைத்து தாராளமாக வழங்கமுடியாவிட்டால் கதிரைகளில் அமர்ந்து என்ன பயன்? இவர்கள் சும்மா நொண்டிச் சாட்டுக்களைக் கூறி அறிக்கை விட்டுக் கொண்டிருப்பதில் பயன் ஏதும் இல்லை.

அரசாங்கம் தனது பூரண கட்டுப்பாட்டில் இருக்கும் மக்கள் நலனில் போதிய அக்கறை செலுத்தாது ஏனோதானோ என்று நடந்துகொண்டாலும் இந்த அரச உயர் அதிகாரிகளாவது சிறிதளவு மக்கள் பற்றுடன் செயற்பட்டால் என்ன? அவர்கள் சற்றுக் கண் திறந்து செயற்படுவார்களா?

*மானிப்பாய்.* செ.சேதுலிங்கம்.

## தொழிலாளர் கற்கைநெறிச் சான்றிதழ்

பல்வேறு காரணங்களினால் தமது உயர்கல்வியைத் தொடரமுடியாத அரச, தனியார் துறைகளில் பணியாற்றுபவர்களின் அறிவாற்றலை அறிந்து விருத்தி செய்வதற்காக - யாழ்.பல்கலைக்கழகத்தினாலும் தொழிலாளர் கற்கைநெறிச் சான்றிதழ் ஆரம்பிக்கப்பட்டது.

பலர் மிகவும் ஆர்வத்துடனும் பல்வேறு வகையான எதிர்பார்ப்புகளுடன் தமது வேலைப்பளு மத்தியிலும் பல்வேறுபட்ட இடங்களிலும் இருந்தும் இக்கற்கைநெறியை தொடர்ந்தார்கள். முதற்றடவையாகக் கல்வி கற்ற பலர் சான்றிதழ் பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

1999/2000 கல்வி ஆண்டில் தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இக்கற்கை நெறிக்கான பாடங்களுக்கான பெறுபேறுகளை மட்டும் பெற்றுள்ளனர்.

2001/2002 கல்வியாண்டில் மேற்படி தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான தொழிலாளர் கல்வி டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டு பரீட்சையும் நடத்தப்பட்டு தொழிலாளர் கல்வி டிப்ளோமா பாடங்களுக்கான பெறுபேறுகள் மட்டும் வழங்கப்பட்டுள்ளன.

எனவே மேற்படி கற்கைநெறியை பூர்த்திசெய்த மாணவர்கள் கல்வி பயிலும் வயதைக் கடந்து படித்தவர்கள். தமது சான்றிதழ்கள் மூலம் தமது வேலைத்தளங்களில் பதவி உயர்வுகளுக்கு இது ஒரு சான்றாக அமையும் என எதிர்பார்ப்பதனால் உரியவர்கள் இச்சான்றிதழ்களையும் இதன் தகைமைகளையும் உடனடியாக வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொழிலாளர் கற்கைநெறி.* மாணவர்கள்.

## வர்த்தகர் சங்கத்தின் கவனத்திற்கு

பொருள்களை யாழ்.வர்த்தகர்கள் கப்பலில் கொண்டு வருகின்றார்கள். அப்படிக் கொண்டு வரும் பொருள்களின் சில்லறை விலையை வர்த்தகர் சங்கம் - வர்த்தகர்களுடன் கலந்து ஆலோசித்து கிலோ என்ன விலை என்பதை பத்திரிகை மூலம் நுகர்வோருக்கு அறியத் தந்தால் மிகவும் நல்லது. இதனால் சிறு வியாபாரிகள் தாங்கள் கொள்முதல் செய்யும் பொருள்களை பேரம் பேசி வாங்கமுடியும்.

சில வியாபாரிகள் - தீவுப் புற வர்த்தகர்கள் - தாங்கள் கொள்முதல் செய்யும் அரிசி, மா, சீனி, பருப்பு என்பனவற்றுக்கு நிறை போடுவதில்லை. இதில் எத்தனை கிலோ குறைந்தாலும் அது ஒரு மூடைதான். எது எவ்வாறு இருப்பினும் இந்த விடயத்திலும் யாழ்.வர்த்தக சங்கம் கவனம் செலுத்தவேண்டும்.

*வங்களாவடி, வேலணை.* வே.திருநாவுக்கரசு.

திண்டுக்கல் மாவட்டம், பழநிப் பகுதியில் குளத்தில் மேய்ந்து கொண்டிருந்த மாட்டின் வாயில் சிக்கிய வெடி பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இதனால் வெடி குண்டு வெடித்ததாகப் பரபரப்பு ஏற்பட்டது.

பழநி, வையாபுரி குளத்தில் பல மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. ஒரு காளை மாடு குளத்தில் அமைக்கப்பட்டுள்ள பைபாஸ் ரோடு அருகில் தனியாக மேய்ந்து கொண்டு இருந்தது. அப்போது திடீரென்று வெடிவெடிப்பது போன்று பயங்கரச் சத்தம் கேட்டது. தொடர்ந்து காளை மாட்டின் அலறல் சத்தமும் கேட்டது.



வெடியைக் கடித்த மாடு

மாட்டின் வாயில் இருந்து இரத்தம் ஒழுகிக் கொண்டு இருந்தது. தாடைபகுதி மற்றும் நாக்கு முற்றிலும் சேதம் அடைந்திருந்தன. வலி தாங்காமல் மாடு அலறியது. குண்டு வெடித்துவிட்டதாகக் கருதி ஏராளமான மக்களும் குளக்கரையில் கூடினார்கள்.

தகவல் அறிந்த பொலிஸார் அங்கு விரைந்தனர். அப்பகுதியில் மேலும் வெடிகுண்டுகள் எதாவது கிடக்கின்றனவா என்று 'மெட்டல் டிடெக்டர்' மூலம் சோதனை நடத்தினர். ஆனால் வெடிகுண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. வெடிகுண்டு வெடித்ததற்கான அறிகுறிகளும் காணப்படவில்லை.

காகிதங்களை மேய்ந்துக் கொண்டிருந்தபோது ஏதோ வெடி மாட்டின் வாயில் சிக்கி வெடித்து இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் அந்த வெடி திருவிழா சமயங்களில் பயன்படுத்தப்படும் 'அணுகுண்டு' அல்லது அதிக சத்தத்துடன் வெடிக்கும் பட்டாஸ் அல்லது 'வெங்காய வெடி'யாக இருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# மாட்டின் வாயில் வெடித்த வெடி பழநியில் ஏற்படுத்திய பரபரப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரில் நற்போசன விழிப்புணர்வு கண்காட்சி இரண்டு நாள்கள் இடம்பெறும்

யாழ்ப்பாணம்,ஒக.19

காரைநகரில் நற்போசன விழிப்புணர்வுக் கண்காட்சி நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு காரைநகர் தியாகராசா மத்திய மகாவித்தியாலய ஆரம்பப் பாடசாலையில் திருமதி க.விக்கினேஸ்வரி தலைமையில் ஆரம்பமாகும்.

இந்தக் கண்காட்சி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறைப் பிரதேச வைத்திய அதிகாரியும் பதில் சுகாதார வைத்திய அதிகாரியுமான டாக்டர் அருணா புண்ணியமூர்த்தி, காரைநகர் பிரதேச வைத்திய அதிகாரி டாக்டர் எ.ஜெயசேகரா, டாக்டர் சு.சுவாமிநாதன், காரைநகர் ஆயுள்வேத மத்திய மருந்தக வைத்தியர் டாக்டர் செல்வி கிளமென்ரினா சிசில், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இந்தக் கண்காட்சி இரண்டு நாள்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இடம்பெறவுள்ளன. (203-250)

## முற்பகல் வேளையிலேயே இம்முறை இசை அர்ச்சனை

யாழ்ப்பாணம்,ஒக.19

நல்லூர் கந்தன் கார்த்திகைத் திருவிழாவை முன்னிட்டு வழமை போன்று இம்முறையும் இசை அர்ச்சனை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி கார்த்திகைத் திருவிழாவாகும். அன்று முற்பகல் 11 மணியளவில் சகல இசைக் கலைஞர்களும் பங்குபற்றும் இந்த இசை அர்ச்சனை இடம்பெறவுள்ளது.

இந்த இசை அர்ச்சனை குறித்த ஒத்திகை பார்ப்பதற்கு கலைஞர்கள் அனைவரையும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீனத்தில் ஒன்றுகூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஒக.19

வண்ணார்பண்ணை காட்டுத்துறை அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலய சங்காபிஷேகம் நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்று மாலை 5 மணிக்குத் திருவூஞ்சல் நடைபெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வருவார். (203)

* * *

சுன்னாகம்,ஒக.19

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலய அலங்காரத் திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (203)

* * *

மந்திகை,ஒக.19

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ண ஜயந்தி இடம்பெறவுள்ளது. (203-218)

* * *

கல்வயல் சாந்தநாயகி சமேத சிவந்திர மௌலீசர் ஆலய நவக்கிரக கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும்.

நவக்கிரக விசேட அபிஷேகமும் சகஸ்ரநாம அர்ச்சனையும் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஒக.19

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ண ஜெயந்தி இடம்பெறவுள்ளது.

காலை 8 மணி தொடக்கம் வேணுகோபால சுவாமிக்கு அஷ்டோத்திர கலச சங்காபிஷேகமும் தொடர்ந்து தீபாராதனை, சகஷ்ர நாம அர்ச்சனை என்பன இடம்பெற்று சுவாமி வசந்த மண்டபத்தில் எழுந்தருளுவார். தொடர்ந்து உறியடி உற்சவம் இடம்பெறும்.

மறுநாள் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஜனனபூசை, தாலாட்டு என்பன இடம்பெறும். பி.ப. 4 மணிக்குச் சுவாமி வீதியுலா வருவார். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஒக.19

மீசாலை கிழக்கு பட்டையோலைச்சி வீரகத்திப் பெருமாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளைமறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி சங்காபிஷேகத்துடன் திருவிழா நிறைவடையும். (203-131)



புலோலி பசுபதீஸ்வரர் ஆலய தேவியின் தேர்த்திருவிழாவின்போது எடுக்கப்பட்ட படம். (218)



வட்டு.கிழக்கு துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா கடந்த 15ஆம் திகதி இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம். (29)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஒக.19

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று திருமதி செல்வம் நாகராஜாவின் இசைக் கச்சேரி இடம்பெறும்.

வயலின் செல்வி பாக்கியலட்சுமி நடராஜா, மிருதங்கம் சி. ரமணா. (203)

* * *

யாழ்ப்பாணம்,ஒக.19

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் பெருந்திருவிழாக் காலங்களில் நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை 'திருவாய் பொழிய சிவாய நம எனத் திருநீறு அளித்தேன் தருவாய் சிவனே' என்னும் தலைப்பில் சைவப்புலவர் கந்தசத்திய தாசன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

சங்கரத்தை துணைவி அறநெறிப் பாடசாலை, சங்கானை வெல்வில் அறநெறிப் பாடசாலை, அரியாலை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் [illegible] னையும் இடம்பெறும். (203)




# நல்லூர்ப் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்

இன்றிருளை நீக்கி யெழுந்த கதிரவன்போல்
அன்றென் அகவிருளைத் தீர்ப்பதற்குக் - குன்றுபோல்
வந்தா னொருவன் வளஞ்சேரும் நல்லூரில்
தந்தா னருளெனக்குத் தான்.

- யோகர் சுவாமிகள்.

## அல்லல் அகன்றுவிடும்

நல்லை முருகப்பன் நாமத்தை உச்சரிப்போர்
அல்லல் விரைவில் அகன்றுவிடும் - இல்லையெனில்
நாடுவரோ நல்லூரை நாளும் வலம்வந்து
பாடுவரோ பக்தராய்ப் பணிந்து

பணிவார்க்குப் பயமில்லை பஞ்சமில்லை எவ்விடத்தும்
துணிவாகத் தங்கருத்தைச் சொல்லிடுவர் - தணியாத
ஆவலுடன் நல்லூர் அடைந்து வழிபடுவோர்
தேவருக்கும் மேலாவர் தேர்.

சி.வெற்றிவேலு, வட்டுக்கோட்டை.

## இன்னல்கள் தீரவேண்டும்....

சரவணப் பொய்கை வந்த
சரவணா சிவன் குமாரா
சங்கடம் தீர்த்திட வே
சங்கரன் மைந்தா வா வா!

பச்சை மயி லேறிவரும்
பழமுதிர்ச் சோலை வேலா
பாவிகள் எமையும் காக்க
பரிவுடன் எம் முன்னே வா!

இம்மையில் அனுபவிக்கும்
இன்னல்கள் நொடியிலோட
இறைஞ்சுகிறோம் நாமே
இன்றேவா நீயும் முன்னே!

இரா.ஷிவதர்சினி, யாழ்.பல்கலைக்கழகம்.

## வேலே துணை!

சிவன் நெற்றிக் கண்ணினின்றும்
உதித்த திரு ஆறுமுகவேல்!
கார்த்திகைப் பெண்கள்
வளர்த்ததிருக் குழந்தைவேல்!
சூரனைச் சங்காரம்
செய்தவீர வெற்றிவேல்!
தேவர்தமைச் சிறைமீட்டு
வாழ்வளித்த கருணைவேல்!
அமிழ்தான தமிழதனை
அளித்தநல் முத்துவேல்!
ஔவைக்குச் சுட்டபழம்
தந்த திருச் சண்முகவேல்!
வள்ளி தெய்வானை
மணாளனாம் சிங்கார வேல்!
நல்லைத் திருப்பதியில்
வீற்றிருக்கும் தங்கவேல்!
தந்தைக்கு உபதேசம்
செய்த அருள் ஞானவேல்!
மாங்கனிக்காய் உலகதனைச்
சுற்றிவந்த பழனிவேல்!
யாமிருக்கப் பயமெதற்கு
என்றுணர்த்தும் முருகவேல்.

ப.மகேந்திரதாசன், நாயன்மார்கட்டு.

## இதுவும் உன் விளையாட்டோ

நல்லைக் குமரா நாங்கள் உன்னை
நாளும் தொழுது பயனெ துவுமே
இல்லை என்று உன்ன டியார்கள்
ஏங்கும் நிலைமை இன்று ஏனோ
சொல்லு நீதான் மனமிரங் கிவந்து
சோகம் நீக்கி எமைவா ழவைக்க
வில்லை யென்றால் எங்கள் பக்தி
வீணோ இதுவும் உன்வி ளையாட்டோ.

- வ.யோகானந்தசிவம்.

## எப்போது விடியலையா?

அப்பாவின் பிள்ளையே! ஆறுமுகா!
அரனார்க்கே ஓமுரைத்த பண்டிதனே!
தப்பாதே பகைமுடித்த தமிழ்த்தலைவா!
தரணியிலே படைவீடு கொண்டவனே!
முப்போதும் நல்லையெழில் பதியினிலே!
முருகாஎம் மினத்தார் துதித்திடுவர்
எப்போது எம்மினத்தின் விடியலையா?
தப்பாதே தந்தருள்வாய் தமிழ்த் தலைவா.

- கவிஞர் சரசாலையூரான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# யுத்த களமாக மாறியிருக்கும் தென்னிலங்கைத் தேர்தல்கள்

நாட்டில் தேர்தல்களின் பெயரால் நடைபெறும் வன்முறைகள் மற்றும் ஊடக அடக்குமுறை ஆகியவற்றை சர்வமத பேரவை கண்டித்திருக்கின்றது.

வன்னியில் ஈழத் தமிழர்களுக்கு மனிதப் பேரவலத்தை ஏற்படுத்தும் கொடூரப்போர் வெடித்திருக்கையில், அந்த மக்களின் அல்லல் குறித்து கொழும்பில் கவலைப்படுவோரும், சிந்திப்போரும் எவருமில்லை என்ற நிலைமை. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிக்கின்ற மக்கள் என்பதால் அவர்கள் தீண் டத்தகாதவர்கள் அல்லது துன்பியல் அனுபவங்களுக்குள் தோய வேண்டியவர்கள் என்று சபிக்கப்பட்டவர்கள் எனத் தென்னிலங்கை கருதுகின்றதோ என்னவோ தெரியவில்லை.

எது, எப்படியென்றாலும் தெற்கில் நடக்கும் அராஜகம் குறித்து மட்டுமேனும் கவலைப்படுவதற்கு சர்வமத பேரவை முன்வந்திருப்பதும், அந்தக் காட்டுமிராண்டித் தனத்தைப் பகிரங்கமாகக் கண்டிக்கும் துணிவு பேரவைக்கு ஏற்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்க நல்ல விடயங்களாகும்.

ஆனாலும் ஒரு குறைபாடு. பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ, இந்து மதத் தலைவர்கள் என நான்கு பிரதான சமயத்தவர்களையும் கொண்ட இந்த சர்வமத காங்கிரஸின் சார்பில் 16 பேர் இந்தக் கண்டன அறிக்கையில் ஒப்பமிட்டுள்ளனர். ஆனால் அவர்களுள் ஒரேயொருவரே இந்து மதத்தவர். அதுவும் இந்து சமய ஆலோசகர் ஒருவரே அதில் ஒப்பமிட்டுள்ளார்.

இஸ்லாம் மதத்தின் சார்பிலாவது ஜம்மியத்துல் உலமா சபையின் சார்பில் இரு தலைவர்கள் ஒப்பமிட்டிருக்கின்றார்கள்.

தேசிய மட்டத்தில் கூட பிரதான தரப்புடன் இணைந்து பொது விடயங்களில் தன்னும் கண்டனம் தெரிவிப்பதற்கு ஐக்கியமில்லாத அளவுக்கு இலங்கைத்தீவு பிளவுபட்டு, விலகி, மக்கள் தமக்குள் வேறுபட்டு நிற்கும் நிலைமையே இங்குள்ளது என்பதை உணர்த்துவதற்கு இது நல்லதோர் உதாரணம்தான்.

''நீண்ட நாகரிக பண்பு நிறைந்த வரலாற்றைக் கொண்ட இலங்கைக்கு இந்த மாகாணத் தேர்தல் காட்டுமிராண்டித்தனம் நிறைந்த யுத்த களமாக மாறியிருப்பது பேரிழுக்காகும்'' என்று கவலை தெரிவித்திருக்கிறது சர்வமத பேரவை.

சப்பிரகமுவ மாகாணசபை, வடமத்திய மாகாண சபை ஆகியன ஆயுதமேந்திய போராடுகளம் போன்று மாறியுள்ளமையை விசனத்துடன் சர்வமத பேரவை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

''ஊடக சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பது ஜனநாயக நாட்டின் அடிப்படையான கடமையாகும். ஊடக சுதந்திரத்தை ஒடுக்குதல், ஊடகவியலாளரைக் கொல்வது, கடத்துவது மற்றும் மனிதத் தன்மையற்ற முறையில் வதை செய்து தாக்குதல் நடத்துவது ஆகியவற்றின் மூலம் நாட்டின் ஜனநாயக நெறிமுறை குற்றுயிராக்கப்படுவது தெளிவாகின்றது. இந் நிலைமையை அனைத்து மக்களும் சமய, இன, கட்சி பேதமின்றி எதிர்க்கின்றனர்.'' - என்று தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றது அந்த அமைப்பு.

இந்தக் கண்டன அறிக்கையில் இரண்டு விடயங்கள் கவனிக்கத்தக்கவை.

ஒன்று - தேர்தல் வன்முறைகளும், ஊடக அடக்குமுறையும் காட்டுமிராண்டித்தனமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன என்று சர்வமதப் பேரவை சுட்டிக்காட்டும் அதேவேளை, அதற்கு யார் பொறுப்பு என்று நேரடியாக அது வெளிப்படுத்தவில்லை. எனினும், அந்த அறிக்கையின் வாசகங்கள் ஊடாக ஆட்சிப் பீடத்தையும் ஆட்சித் தலைவரையுமே அந்த அறிக்கை சொல்லாமல் சொல்லுவது போல சாடுகின்றது என்பது தெளிவு.

அடுத்தது - இந்த வன்முறைச் சூழல் ஏற்படாமல் தடுக்க - தவிர்க்க - கிடைத்த வாய்ப்பைத் தவற விட்டமையை விசேடமாகக் குறிப்பிட்டதன் மூலம், அத்தகைய தவறு ஏற்படுவதற்குக் காரணமான தரப்பே இந்த இழிநிலைக்கும் பொறுப்பு என்பதையும் சர்வமதப் பேரவை சொல்லாமல் சொல்லியிருக்கின்றது.

சுதந்திர தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு போன்றவை நடைமுறைக்கு வந்திருக்குமானால் இத்தகைய வன்முறைச் சூழலை ஓரளவேனும் தடுத்திருக்க முடியும் என்பதையும் -

இத்தகைய சுதந்திர ஆணைக்குழுக்களை ஏற்படுத்துவதற்கான அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் சகல அரசியல் கட்சிகளினதும் இணக்கத்துடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதையும் -

சர்வ மதப் பேரவை சுட்டிக்காட்டி நினைவுபடுத்தியிருக்கின்றது.

ஆக, இத்தகைய சுதந்திர ஆணைக்குழுக்களை செயற்படுத்தாமல் - அது தொடர்பான ஒழுங்குகளை நடைமுறைக்குக் கொண்டுவராமல் - தடுத்து, தடைபோட்டு, உரிய நடவடிக்கை எடுக்காமல் தவிர்த்து, சூழலைக் கெடுத்த ஜனாதிபதியே இந்த இழிவு நிலைமைக்கு - சர்வமதப் பேரவையின் கண்டனத்தின் அடிப்படையிலும் - குற்றப் பொறுப்பு ஏற்க வேண்டியவராகின்றார்.

அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டால், தனது அதிகாரங்கள் பல பறிபோய்விடும் என்ற உண்மை காரணமாக அதற்கு இடக்குப் போட்டு, முடக்குப் பண்ணி, நிலைமையைக் கெடுத்த ஜனாதிபதி, தொடர்ந்தும் விவகாரம் மோசமடைய இடமளிக்காமல், 17 ஆவது திருத்தத்தைக் கால தாமதமின்றி நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும். அப்போதுதான் தென்னிலங்கையில் நிலைமை ஓரளவுக்கேனும் சீராகும் வாய்ப்புக் கிட்டும்.



அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழாக் காட்சிகள் சில. அம்பாள் தேரை நோக்கி எழுந்தருளி வருவதையும் தேரில் எழுந்தருளி வீதி உலா வருவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

# வன்னி மக்கள் படும் துயரைப் போக்க சர்வதேச நிறுவனங்கள் முன்வர வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக.19

வன்னியில் இடம்பெற்றுவரும் போர் நடவடிக்கைகளால் போருடன் நேரடித் தொடர்பு அற்ற பொதுமக்கள் பாதிக்கப்படுவது வேதனைக்குரியது. இம் மக்களின் துயரைப் போக்குமாறு அனைத்து சர்வதேச நிறுவனங்களையும் கேட்கின்றோம்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

இதுதொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வன்னிப் பெருநிலப்பரப்பை கையகப்படுத்தும் நோக்குடன் இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் போரின் காரணமாக சாதாரண போர் நடவடிக்கைகளோடு நேரடித் தொடர்பு அற்ற பொதுமக்கள் பாதிக்கப்படுவது வேதனைக்குரிய விடயமாகவுள்ளது.

நிச்சயமற்ற இருப்பு நிலையோடும் மிரட்சியும் அச்சமும் கலந்த வாழ்வோடும் வறுமையோடும் போராடும் அம் மக்களின் துயரினைப் போக்க தேவையான அனைத்து நகர்வுகளையும் மேற்கொள்ளும் வண்ணம் மனித நேயத்தின் பேரினால் அனைத்து சர்வதேச நிறுவனங்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

குடாநாடு தழுவிய ரீதியில் ஏற்பட்ட இடப்பெயர்வின்போது எம்மைத் தாங்கிய உறவுகள் இன்று மருத்துவ, இருப்பிட, உணவுத் தேவைகள் என பல தேவைகளுக்காக ஏங்கி நிற்கின்றன. அவர்கள் அனைவரது சகல தேவை களையும் பூர்த்தி செய்வது இயலாது. எனினும் அரசு தனது நலன்சார் திட் டங்களையும், அனர்த்த நிவாரண உதவிகளையும் பாரபட்சம் இன்றி வழங்கும் வண்ணம் கேட்டுக் கொள் கின்றோம்.

அத்துடன் ஐ.நா முகவர் அமைப்புகளையும் வேறு தொண்டு நிறுவனங்களையும் தமது மனிதாபிமானப் பணிகளுக்கு அனுமதிப்பதுடன் பொது மக்களை பாதிக்காத வகையிலே போர் நடவடிக்கைகளை இரு தரப்பினரும் மேற்கொள்ளும் வண்ணமும் விநயமாகக் கேட்டு நிற்கின்றோம்.

**கல்வி உரிமை பாதிக்கப்படுகிறது**

போர் தரும் நெருக்கடியான சுமைகளையும், வலிகளையும் சுமந்தவர்கள், அனுபவித்தவர்கள் எனும் அடிப்படையில் வன்னிப்பிரதேச மாணவர்களது மன உணர்வுகளையும், ஏக்கங்களையும் எம்மால் விளங்கிக்கொள்ள முடியும். பல்கலைக்கழக கல்வியை எதிர்பார்த்து அவர்கள் பரீட்சைக்கு தோற்றும் நிலையில் வெறும் அழிவுகளையே விளைவிக்கும் போரை அடிப்படையாக வைத்து அம்மாணவர்களது கல்வி உரிமை மறுக்கப்படும் வழியாகவே இப் போர் அமையும். எனவே போரின் காரணமான இடம்பெயர்வையும் அதன் நிழல் தொடர் அனுபவங்களையும் சுமந்து நிம்மதியற்று தவிக்கும் வன்னி மக்களின் வாழ்வில் அமைதி ஏற்படவும் அவர்களது அடிப்படைத் தேவைகள் நிறைவேறுவதற்கான வழிகள் திறக்கவும் பிரார்த்திக்கின்றோம்- என்றுள்ளது. (202)

# வடமராட்சி வடக்கில் நிலக்கடலைச் செய்கை

வடமராட்சி, ஒக.19

வடமராட்சி வடக்கில் (பருத்தித்துறை)ப் பிரதேசத்தில் தொடர்ந்து வரும் காலங்களில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்படவிருப்பதாக புலோலி விவசாயப் போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இப்பிரதேசத்தில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட நிலக்கடலைச் செய்கை எதிர்பார்த்த விளைச்சலைத் தந்துள்ளது.

இதையடுத்தே தொடர்ந்து வரும் காலங்களில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ள விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர் எனவும் போதனாசிரியர் மேலும் தெரிவித்தார். (202-236)

# தாச்சிப்போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ்ப்பாணம் இலங்கை வங்கி, கொமர்ஷல் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 4.30 மணிக்கு தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து வி.கவும் மயிலிட்டி நியூகிற் விகவும் மோதுகின்றன. (1-86)

# புலோலி வேலாயுதம் ம.வி. நிறுவுனர் நினைவுப் பேருரை

வடமராட்சி,ஒக.19

பருத்தித்துறை,புலோலி வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் நிறுவுனர் தினப் பேருரை எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

வித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளைத் தலைவர் சே.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'சுதந்திரத்தின் பின்னரான அரசியல் அமைப்புகளும் நல்லாட்சியும் சரிவும்' என்னும் தலைப்பில் வித்தியாலய பழைய மாணவரும் கொழும்பு சட்டத்துறைப் பீடாதிபதியுமான பேராசிரியர் நா.செல்லக்குமார் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை வித்தியாலய பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை செய்துள்ளது. (202)

# சிறுவர்களின் பங்களிப்புடன் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக.19

சமுத்திரா நலன்புரி நிலைய மாணவர்களும், குடத்தனை கிராம மாணவர்களும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா சிறுவர்களின் முழுமையான பங்களிப்புடன் நடைபெற வுள்ளது.

நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுழிபுரம் குடத்தனை விளையாட்டு மைதானத்தில் இவ்விழா நடைபெறவுள்ளது.

சிறுவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக விக்ரோறியாக கல்லூரியின் மாணவனும் தேசியமட்ட விளையாட்டு வீரனுமான பா. சிவதாசன் கலந்து கொள்வார். (202-21)

# ஆனைக்கோட்டை தாமரைக்குளம் ஆழமாக்கப்படுகிறது

நவாலி,ஒக.19

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள தாமரைக் குளத்தை ஆழமாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக சேறு அள்ளும் வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இச்சேற்றில் அதிக பசளையுள்ளதால் விவசாயிகள் உழவு இயந்திரங்கள் மூலம் இதனை ஏற்றி தத்தமது வயல்களுக்குள் கொட்டி வருகின்றனர்.

சேறு தேவையான விவசாயிகள் ஆனைக்கோட்டை உயரப்புலம் விவசாய சம்மேளனத்துடன் தொடர்பு கொள்ளலாமென்று சம்மேளனச் செயலாளர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்தார். (202-100)

## சமூகசேவை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில்

# பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 5 அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பு

வடமராட்சி,ஒக.19

சமூக சேவை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட 5 அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் இரண்டு வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஏனைய மூன்று வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத் தகவலை பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன் தெரிவித்தார்.

புலோலி வடகிழக்கு தமிழருவி சனசமூக நிலையம் இரண்டு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது. புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் சனசமூக நிலையத்திற்கு ஒரு லட்சம் ரூபா செலவில் மலசலகூடம், தண்ணீர்தாங்கி என்பன அமைக்கப்பட்டுள்ளன.

பொலிகண்டி கிழக்கு பலநோக்கு மண்டபத்திற்கு சுற்றுமதில் இரண்டு லட்சம் ரூபா செலவிலும், பொலிகண்டி கிழக்கு வயோதிபர் இல்லத்திற்கு சுற்றுவேலி மூன்று இலட்சம் ரூபா செலவிலும், கெருடாவில் தெற்கு பலநோக்கு மண்டபத்திற்கான சுற்றுமதில் இரண்டு இலட்சம் ரூபா செலவிலும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஐந்து வேலைத்திட்டங்களுக்கென சமூகசேவை அமைச்சு 10 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தது என்றும் பிரதேச செயலர் தெரிவித்தார். (202-236)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 04 | 20.08.2008 புதன்கிழமை |
| திதி: | சதுர்த்தி பி.இ. 12.30 வரை |
| நட்சத்திரம் : | உத்தரட்டாதி, சித்தம் பி.ப.03.37வரை |
| சுபநேரம் : | 04.35 - 06.05 |
| ராகுகாலம் : | 12.05 - 01.35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவில் தெற்கு - சந்திரபுரம்
கல்வம் சாந்தநாயகி சமேத
சிவசந்திர மௌலீசர் ஆலயம்



நவநாயகர் (நவக்கிரகம்)
## நூதன பிரதிஷ்ட கும்பாபிஷேகம்

சர்வதாரி வருஷம் ஆவணி 4ஆம் நாள் (20.08.2008) புதன் கிழமை காலை 6 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகும்.

20.08.2008 புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரையும் பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும்.

### கும்பாபிஷேகம்

ஆவணி மாதம் 5ஆம் நாள் (21.08.2008) வியாழக் கிழமை காலை 8 மணிமுதல் 9 மணிவரையுள்ள ரேவதி நட்சத்திரமும், கன்னி லக்கினமும், சித்தாமிர்த யோகமும் கூடிய சுபவேளையில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

### நவக்கிரக விசேட அபிஷேகமும் சகஸ்ரநாம அர்ச்சனையும்

ஆவணி மாதம் 7ஆம் நாள் (23.08.2008) சனிக்கிழமை நவகுண்ட அபிஷேகமும், சகஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெற்று தொடர்ந்து விஷேட பூசை நடைபெறும். இதில் பங்குபெற விரும்பும் அடியார்கள் ஆலய முகாமையாளரிடம் தொடர்புகொண்டு பெயர், நட்சத்திரத்துடன் நிதியை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

மட்டுவில் - கல்வம். (77301) ஆலய தர்மகர்த்தா.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதுகலை மாணிப் பரீட்சையில் விசேட சித்தி பெற்ற எமது கல்வி மன்றத்தின் தமிழ் ஆசானும் யா/வதிரி வடக்கு மெ.மி.த.க.பாடசாலையின் அதிபருமாகிய

திரு.கிட்டிணபிள்ளை இராஜதுரை
B.A.(PGD.in.Edu), M.A..(Dev.Stu)

அவர்களை மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று சீருடனும், சிறப்புடனும் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

லிவ்கோ கல்வி மன்றம்,
உடுப்பிட்டி.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.



BOC
## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளை களில் 30.11.2007இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 31.05.2007இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத்திகதி இடம் நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக்கிளை | யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை யாழ்ப்பாணம் 2008செப்ரெம்பர் 6ஆம் திகதி (சனி), 7ஆம் திகதி (ஞாயிறு) மு.ப. 9.30 மணிக்கு |
| யாழ்.2ஆம் மேற்தரக்கிளை | |
| திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காரைநகர் | |
| சுன்னாகம் (அச்சுவேலி விரிவாக்கற்கிளை உட்பட) | |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காங்கேசன்துறை | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (வேலணை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி [வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் காரியாலயம்]
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3126, 021 222 2735



## 45ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு



தோற்றம் 11.06.1983
மறைவு 06.07.2008

கடந்த 06.07.2008 ஞாயிற்றுக்கிழமை காலமாகிய எங்கள் குடும்ப விளக்கு

அமரர்
கோபாலசிங்கம் சதுர்முகன் (சதுர்)

அவர்களின் 45ஆம் நாள் நினைவுதினம் இன்று (19.08.2008) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

21/1, இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (77298) குடும்பத்தினர்.


# வலிகாமம் வலயப் பாடசாலைகளுச் கிடையிலான மனைப்பொருளியல் சஞ்சிகை ஆக்கப் போட்டி முடிவுகள்

தொல்புரம்,ஓக.19

வலிகாம்ம் கல்வி வலயப் பாடசாலைகளிடையே மனைப்பொருளியல் சஞ்சிகை ஆக்கப் போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளின் முடிவுகள் கோட்ட, வலய ரீதியாக வருமாறு:

### கோட்டமட்ட முடிவுகள்

**சங்கானை**

ஆரோக்கியமாக வாழ - (விக்ரோறியாக் கல்லூரி), கலை அமுதம் - (மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம்), வாழ்வின் பெட்டகம் - (வட்டு இந்துக் கல்லூரி),

**சண்டிலிப்பாய்**

அகஒளி - (ஆனைக்கோட்டை றோ.க. பாடசாலை), மலர்கள் (சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), மனை அமுதம் (மானிப்பாய் மகளிர் கல்லூரி),

**உடுவில்**

அமுது - (கந்தரோடை தமிழ்க்கலவன் வித்தியாலயம்), மனைமலர் - (ஏழாலை மகா வித்தியாலயம்), மனையருவி - (இணுவில் மத்திய கல்லூரி)

**உடுவில்**

மனைமலர் (ஏழாலை ம.வி), மனை அருவி - (இணுவில் மத்திய கல்லூரி), மனை அமுதம் -(இராமநாதன் கல்லூரி)

**தெல்லிப்பளை**

இளம்தென்றல் - (யூனியன் கல்லூரி), பருவம் - (மல்லாகம் ம.வி.), மனை அமுதம் - (மகாஜனக் கல்லூரி).

### வலயமட்ட முடிவுகள்

**தரம் 10-11**

அகஒளி - (ஆனைக்கோட்டை றோ.க.பாடசாலை), கலைமலர் - (யூனியன் கல்லூரி), வாழ்வின் ஒளிவிளக்கு - (குளமங்கால் றோ.க. பாடசாலை)

**தரம் 12,13**

அமுதம் - (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), இளநங்கை - (இளவாலை கன்னியர் மடம் ம.வி), கலைமுகில் - (வட்டு இந்துக் கல்லூரி).

(202-119)


## தவறிவிட்டது

கூத்தன் சீமா, அளவெட்டி மத்தி என்னும் முகவரியுடைய கிருஷ்ணமூர்த்தி சுரேன்ஜீத் என்பவரது தேசிய அடையாள அட்டை (880822713 V) கடந்த 12.08.2008 அன்று அளவெட்டி பண்டத்தரிப்பு வீதிக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியிலோ அல்லது 0774248853 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொண்டு தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.



## பகிரங்க ஏல விற்பனை

யாழ்.சுங்கத் திணைக்களத்தின் பொறுப்பிலுள்ள பின்வரும் பொருள்கள் 25.08.2008 திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு யாழ். செயலக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

1.கண்ணாடி இழை வள்ளம் - நீளம் 18 அடி 4 அங்குலம் - 01
2."செய்யது" பிடி அடங்கிய பொதிகள் - 30

இந்த ஏல விற்பனையில் பொருள்களைப் பெற்றுக்கொண்டவர்கள் அன்றைய தினமே அவற்றுக்குரிய மொத்தப் பணத்தையும் செலுத்தி பொருள்களை செயலக வளாகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

மேற்படி பொருள்களை பார்வையிட விரும்புவோர் 18.08.2008 தொடக்கம் 22.08.2008 வரையுள்ள காலத்தில் மு.ப.9 - பி.ப.3 மணி வரையுள்ள அலுவலக நேரத்தில், செயலக நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி/554191)



## கேள்வி அறிவித்தல்
## ஸ்ரீ லங்கா ரெலிகொம் பொ.வ.க.

சித்தங்கேணியில் சீடிஎம்ஏ அடிப்படை செலுத்தீட்டு நிலையத்துக்கான காணித் துண்டைக் கொள்வனவு செய்தல்

கேள்வி இல: L8/115/Land/2008.

ஸ்ரீலரெயின் சீடிஎம்ஏ அடிப்படைச் செலுத்தீட்டு நிலையத்தை நிறுவுவதற்காக யாழ்ப்பாணத்தில் சித்தங்கேணிச் சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரத்தினுள் அமைந்துள்ள ஒரு காணித்துண்டைக் கொள்வனவு செய்வதற்காக அவற்றின் உரிமையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி நிலமானது 15-20 பேர்ச் விஸ்தீரணம் உடைய தட்டை நிலமாக இருத்தல் விரும்பற்பாலது. பிரதான வீதியில் இருந்து இலகுவில் செல்லக்கூடியதாக இருப்பதுடன் உட்புகுவீதியானது கனரக வாகனங்களை ஓட்டிச் செல்லக் கூடிய அளவு அகலமாக இருத்தல் வேண்டும்

விண்ணப்பங்களை அனுப்ப விரும்புவர்கள் இடத்தின் முகவரி, நில அளவை வரைப்படம், உறுதி ஆகியவற்றின் பிரதிகள், விற்க விரும்பும் விலை ஆகிய விபரங்களை கடித உறையில் இட்டு புதிவுத்தபால் மூலம் கீழேயுள்ள முகவரிக்கு 2008 செப்டம்பர் 2 ஆம் திகதி 14.00 மணிக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்க வேண்டும் அல்லது இதனை சீரிஓ கட்டிடம், ஸ்ரீலங்கா ரெலிகொம் பொ.வ.க. லோற்றஸ் வீதி, கொழும்பு 01 இல் உள்ள கொள்வனவுப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இட வேண்டும்.

கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "சீடிஎம்ஏ அடிப்படைச் செலுத்தீட்டு நிலையத்துக்கு நிலத்தை கொள்வனவு செய்தல்-சித்தங்கேணி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

தலைவர்,
கொள்வனவுப் பகுதி கனிஷ்ட கேள்விச் சபை,
சிரிஓ கட்டிடம்
ஸ்ரீலங்கா ரெலிகொம் பொ.வ.க
லோற்றஸ் வீதி
கொழும்பு - 01.

Sri Lanka Telecom
www.slt.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழல் பந்து வீச்சில் திரும்பவும் இலங்கையிடம் சுருண்டது இந்தியா

## முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் 8 விக்கெட்டுக்களால் வெற்றி

கொழும்பு, ஓக.19

இலங்கை-இந்திய கிரிக்கெட் அணிகளுக் கிடையே நேற்று தம்புள்ளையில் இடம் பெற்ற முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் இலங்கை அணி 8 விக்கெட்டுகளால் அபார வெற்றியீட்டியது.

நேற்றுக்காலை ஆரம்பமான இந்த ஆட் டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் டோனி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

அதன்படி இந்தியாவின் அதிரடித் துடுப் பாட்ட வீரர்களான கௌதம் கம்பீர், காஹில் ஆகியோர் களமிறங்கினர். ஆட்டத்தின் முத லாவது ஓவரின் இரண்டாவது பந்து வீச்சில் கம்பீர் ஓட்டம் எதுவும் பெறாதநிலையில் 'கீளீன்' போல்ட் ஆனார்.

அதைத் தொடர்ந்து இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் ஒழுங்காக- அணிநடை போல- பவி லியன் திரும்பும் பரிதாபம் நேர்ந்தது.

இலங்கையின் சுழற் பந்து வீச்சுத் துப்பாக் கியின் இரட்டைக்குழல்களான முத்தையா முரளிதரனும், அஜந் மெண்டிஸும் வீசிய சுழலுக்கு முகம் கொடுக்க முடியாதவாறு துவண்டது பாரதம்.

சுழற்பந்து ஜோடி தலா மூன்று வீதம் மொத்தம் ஆறு இந்திய விக்கெட்டுகளைச் சரிக்க, எஞ்சிய நான்கு விக்கெட்டகளையும் நுவென் குலசேகர,சமிந்த வாஸ், துஷார ஆகி யோர் பதம் பார்த்து பவிலியனுக்கு அனுப்பி வைத்தனர்.

இலங்கைப் பந்து வீச்சாளர்களின் வேகம், வளைவு நெளிவு, சுழிவுகளுக்கு ஈடுகொடுக்க முடியாது ஆடுதிடலில் நடனமாடிய இந் தியத்துடுப்பாட்ட வீரர்கள் 46 ஓவர் களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஆக 146 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

முத்தையா முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு மூன்று விக் கெட்டுகளையும், மெண்டிஸ் 9 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் டுகளையும் வீழ்த்தினர். குலசேகர 23 ஓட்டங் களுக்கு இரு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்தியத் தரப்பில் துடுப்பாட்டத்தில் யுவராஜ் சிங் மட்டுமே இருபது ஓட்டங்க ளைத் தாண்டி 23 ஐ எட்டினார். கோஹில் - 12, ஹெய்னா - 17, சர்மா - 9, ஹர்பஜன் சிங் - 12, கான் - 12, ஓஜா - 16, பட்டீல் - 15 ஓட் டங்களைப் பெற்றனர்.


வெற்றிக்களிப்பில் இலங்கை அணி வீரர்கள்

147 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்கோடு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இலங்கை அணி 34.5 ஓவர் களில் இரண்டு விக்கெட்டுகள் இழப்புக்கு அந்த ஓட்ட எண்ணிக்கையை எட்டி ஆட் டத்தில் வெற்றி ஈட்டியது.

சனத் ஜெயசூரிய - 10, சங்கக்கார - 19 ஓட் டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் மஹேல ஜெவர்த்தனா ஆட்ட மிழக்காமல் - 61, கபுகெதர ஆட்டமிழக் காமல் - 45 ஓட்டங்களைப் பெற்று இலங்கை அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

எம்.எம்.பட்டீல் 32 ஓட்டங்களுக்கு இரு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இலங்கையின் சுழல் பந்துவீச்சின் புது வரவு நாயகன் அஜந்த மெண்டிஸ் ஆட்டத் தின் நாயகனாகத் தெரிவானார்.

ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இந்த ஒருநாள் தொடரின் முதல் ஆட்டத்தில் வென்று 1- 0 என்ற முன்னிலையை இலங்கை பெற் றிருக்கின்றது.

அடுத்த - இரண்டாவது - ஒருநாள் ஆட் டம் நாளை இதே தம்புள்ள மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

ஏற்கனவே மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இலங்கை 2 - 1 என்ற கணக்கில் இந்தியாவைத் தோற் கடித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.


எதிர்வரும் விநாயகர் சதுர்த் தியை முன்னிட்டு, மும்பையில் உருவாக்கப்பட்டுள்ள 18 அடி உயர விநாயகர் சிலை.

# இலங்கையின் 8 வீரர்களில் அறுவர் ஏற்கனவே 'அவுட்'!

## இன்று 200 மீற்றர் தெரிவில் சுஸந்திகா



பீஜிங், ஓக. 19

பீஜிங் ஒலிம்பிக்கில் இலங்கைக்கு ஏதேனும் பதக்கம் கிட்டுமா?

இலங்கைக்கு இன்னும் மிச்சமிருக்கும் ஒரே நம் பிக்கை நட்சத்திரம் ஒலிம் பிக் வெண்கல வீராங்கனை சுஸந்திகா ஜெயசிங்கதான்!

அவருக்கு ஏதேனும் பதக்கம் கிட்டுமா என்பதற்கான முதல் அறிகுறி இன்று காலை யில் தெரிந்துவிடும்.

இந்த ஒலிம்பிக்கில் இலங்கை சார்பில் எட்டு வீர, வீராங்கனைகள் பங்குபற்றினர். அவர்களில் ஆறுபேரின் நிகழ்ச்சிகள் முடிந்து விட்டன. பெரிய பலன் எதுவும் கிட்டவில்லை.

எஞ்சியிருப்பவர்கள் குறுந்தூர ஓட்ட வீராங் கனை சுஸந்திகா ஜெயசிங்க, ஈட்டி எறிதல் வீராங்கனை நதீகா லக்மாலி ஆகியோரே.

இவர்களில் நதீகா இன்று காலை 9 மணிக்கு (இலங்கை நேரப்படி) ஈட்டி எறிதல் நிகழ் வில் பங்குபற்றுகின்றார்.

சுஸந்திகாவின் 200 மீற்றர் ஓட்டத்துக் கான தெரிவு நிலைப் போட்டி இன்று காலை 9.10 மணிக்கு நடைபெறுகின்றது.

எனவே இந்த ஒலிம்பிக்கில் ஒரு பதக் கமாவது வெல்லும் வாய்ப்பு இலங்கைக்கு உண்டா என்பது பற்றிய முன்னோட்டம் இன்று காலை தெரியவந்துவிடும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இலங்கை வீர, வீராங்கனைகளில் ஏனைய அறுவரும் தாம் பங்குபற்றிய நிகழ்ச்சிகளின் முதல் சுற்றுகளிலேயே 'அவுட்' ஆனமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒலிம்பிக் போட்டியில் சுஸந்திகா வெண்கலப் பதக்கம் வென்றிருந்தார்.

## டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் சாம்பியனானார் நாடால்!

பீஜிங், ஓக. 19

ஒலிம்பிக் ஆண்கள் ஒற்றையர் பிரிவு டென்னிஸ் போட்டியில், ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் சாம்பியன் பட்டம் வென்று தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றார்.

டென்னிஸ் தர வரிசைப் பட்டியலில், உல கின் 'நம்பர் 1' வீரர் என்ற அந்தஸ்தை யும் அவர் பெறுகிறார்.

பீஜிங்கில் நேற்றுமுன்தினம் நடந்த பர பரப்பான இறுதிப் போட்டியில் சிலி வீரர் பெர்னாண்டோ கொன்சாலஸ் உடன் நடால் மோதினார்.

கொன்சாலஸின் சேர்வீஸை எளிதாக முறியடித்த நடால், முதல் செற் ஆட்டத்தை 6-3 என்ற கணக்கில் எளிதாகக் கைப்பற் றினார்.



இரண்டாவது செற்றில் கடுமையாகப் போராடிய கொன்சாலஸ் கடும் நெருக்கடி கொடுத்தார். இரு வீரர்களும் தங்கள் சேர் வீஸில் புள்ளிகளைக் குவித்ததால் ஆட் டம் இழுபறியாக நீடித்தது. எனினும், 'டைபிரேக்கரில்' சிறப்பாக விளையாடிய நடால் 7 - 6 (2) என்ற கணக்கில் வென்று முன்னிலை பெற்றார்.

மூன்றாவது செற்றிலும் அவரது ஆதிக் கமே நீடித்தது. அபாரமாக விளையாடிய அவர் 6-3, 7-6 (2), 6-3 என்ற நேர் செற் களில் வென்று ஒலிம்பிக் தங்கப் பதக் கத்தை முதல் முறையாக வென்று அசத் தினார். இந்த ஆண்டு பிரெஞ்சு ஓபன் மற் றும் விம்பிள்டனில் பெடரரை வீழ்த்திய நடால், முதல் முறையாக 'நம்பர் 1' இடத் துக்கு முன்னேறி உள்ளார்.

# காஷ்மீரில் பெரும் கலவரத்தை ஏற்படுத்தியுள்ள அமர்நாத் விவகாரத்தை முன்னிறுத்தி அத்வானி நாடு முழுவதும் ரத யாத்திரை



புதுடில்லி, ஓக. 19

காஷ்மீரில் பெரும் கலவரம் வெடிக்கக் காரணமாக இருந்த அமர்நாத் கோவிலுக்கு நிலம் வழங்கும் சர்ச் சையை ஒட்டி, நாடு முழுவதும் ரத யாத் திரை ஒன்றை மேற்கொள்ள பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் எல்.கே. அத்வானி முடிவு செய்திருக்கின் றார்.

இது குறித்து பாரதீய ஜனதாவின் மூத்த தலைவர்கள் நேற்றுக் கூடி முக்கிய ஆலோ சனை நடத்தவிருந்தனர்.

அமர்நாத் கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலம் திரும்பப் பெறப்பட்டது பெரும் சர்ச் சையை ஏற்படுத்தியுள்ளது தெரிந்ததே.

இந்தப் பிரச்சினை காரணமாக காஷ் மீரில் தொடர்ந்து பதற்றம் நிலவிவருவதுடன் நாடு முழுவதும் போராட்டங்கள் நடை பெற்று வருகின்றன. இந்த நிலையில், இந் தப் பிரச்சினை தொடர்பாக நாடு தழுவிய அளவில் ரத யாத்திரை நடத்த பாரதீய ஜனதா திட்டமிட்டுள்ளது.

அயோத்திப் பிரச்சினையில் அத்வானி மேற்கொண்ட ரத யாத்திரை பாராதீய ஜன தாக் கட்சிக்குப் பெரும் வரவேற்பைப் பெற்றுத் தந்தது என்பது தெரிந்ததே.

அது போல் அமர்நாத் பிரச்சினையிலும் ரத யாத்திரை நடத்த பாரதீய ஜனதா பரி சீலித்து வருகிறது.

இது தொடர்பாக கட்சியின் மூத்த தலை வர்கள் டில்லியில் நேற்றுக்கூடி முக்கிய ஆலோசனை நடத்தவிருந்தனர்.

அமர்நாத் பிரச்சினை தேசியவாதிகளுக் கும், பிரிவினைவாதிகளுக்கும் இடையே நடைபெறும் போராட்டம் என்றும் -

எனவே இது தொடர்பாக பொதுமக்கள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ரத யாத்திரை குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்றும் - பார தீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் தெரிவித்துள் ளார்.

# உத்தரப்பிரதேசத்தில் பேய் மழை! வெள்ளத்துக்கு 43 பேர் பலி!

லக்னோ, ஓக. 19

உத்தரப்பிரதேசத்தில் விடாது கொட்டி வரும் பேய் மழைக்கு 43 பேர் பலியாகியிருக்கின்றனர்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் சனி இரவு முதல் விடாது மழை கொட்டி வருகிறது. இதன் காரணமாக அங்கு பல மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற் பட்டுள்ளது. இதில் லக்னோ உட்பட பல்வேறு இடங்க ளில் ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்தன.

வெள்ளத்திலும், வீடுகள் இடிந்து விழுந்ததிலும் சிக்கி மொத்தம் 43 பேர் பலி யானார்கள்.

அதிகபட்சமாக பதேப்பூர் மாவட்டத்தில் 18 பேர் உயிரிழந்தனர். பகரைச் மாவட்டத்தில் 7 பேரும், ரேப ரேலியில் 5 பேரும், ஹர்தோயில் 4 பேரும், கொண்டா, தியோ ரியா, உம்னோ, சீத்தாப்பூர், லக்கிம்பூர், அவுரியா மாவட்டங்களில் தலா ஒருவரும் பலியானார்கள். பலர் காயம் அடைந்தனர். எடாவா மாவட்டத்தில் பேக்வார் என்ற இடத்தில் வீடு இடிந்து விழுந்ததில் 50 வய துப் பெண்ணும், அவரது மகனும், 10 வயதுக் குழந்தையும் பரிதாபமாக இறந்தனர்.

பாதிக்கப்பட்ட இடங்களில் பொலிஸ் மற்றும் உயர் அதிகாரிகள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

டில்லி மற்றும் அதன் அருகில் உள்ள ஹரியானா மாநிலத்திலும் கன மழை பெய்து வருவதால், யமுனை ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த ஆற் றில் அபாய அளவைத் தாண்டி, அதாவது 205.55 மீற்றர் அளவுக்கு வெள்ளம் பாய் கிறது. கடந்த 5 ஆண்டு காலத்தில் யமுனையில் இந்தளவு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருப்பது இதுதான் முதல்முறையாகும்.

பக்கத்தில் உள்ள ஹரியானா மாநிலத் தில் இருந்து 25 ஆயிரம் கன அடி வீதம் யமுனை ஆற்றியில் தண் ணீர் திறந்து [illegible] படுகிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி சிவபுண்ணியம்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியை, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சங்கானை, தேவாலய வீதியை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி மகேஸ்வரி சிவபுண் ணியம்பிள்ளை 17.08.2008 ஞாயிற்றுக் கிழமை இணுவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரு - வள்ளிப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவபுண்ணியம்பிள்ளையின் (ஆசிரியர், மஸ்கெலியா மெக்கா குறூப்) அன்பு மனைவியும் அமரர் இராசம்மா, சின்னமேனை, அமரர் இரத்தினம், பூமகள், நாகம்மா, வைரவநாதர், அமரர் முத்தையா, தியாகராசா, அமரர் கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.08.2008) திங் கட்கிழமை இணுவிலில் நடைபெற்று, பூதவுடல் தாவடி மயா னத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.தியாகராசா
மற்றும் சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல்லியடியையும் புங்குடுதீவையும் பிறப்பிடமாகக் கொண்ட

# தமிழ்க் குடும்பஸ்தர்கள் இருவர் ஆயுதக்குழுவினரால் புதுச்செட்டித்தெருவிலும் வத்தளையிலும் கடத்தப்பட்டனர்

கொழும்பு, ஓக. 19

கொழும்பு புதுச்செட்டித்தெரு 70/27 ஆம் இலக்கத்தில் வசித்து வந்த யாழ்.நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட மூன்று பிள்ளைகளின் தந்தையான 34 வயதுடைய செல்வராஜா பாலகுமார் என்பவர் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு கடற்படையினரால் இழுத்துச் செல்லப்பட்டு இலக்கத்தகடு இல்லாத வெள்ளை வானில் வந்த தமிழ் ஆயுதக்குழுவினரால் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார் என அவரது மனைவியான ரோகினி பாலகுமார் முறைப்பாடு செய்துள்ளார்.

வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்பப் பயிற்சி பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணனிடம் இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வீட்டுச் சோதனைக்காக வந்த கடற்படைச் சிப்பாய்கள் தனது கணவரை தாக்கி இழுத்துச்சென்று இலக்கத்தகடு இல்லாத வெள்ளை வானில் வந்திருந்த தமிழ்க் குழுவினரிடம் ஒப்படைத்தனர். அவர்களுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் இருந்தார் எனவும் ரோகினி தெரிவித்தார்.

ஏற்கனவே இதே விலாசத்திலிருந்த மார்க்கண்டு வடிவானந்தன் கடந்த 2006ஆம் ஆண்டு 24ஆம் திகதி கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார். இவரை விடுப்பதற்கு நிறுவன உரிமையாளர் 35 லட்சம் பணம் கப்பமாகச் செலுத்தியபோதும் அவர் இன்று வரை விடுவிக்கப்படவில்லை என்றும், உரிமையாளர் தற்போது தமிழ் நாட்டில் தங்கியிருக்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட தமிழ்க்குழு பாலகுமாரை முன்னர் ஒருமுறை எச்சரித்துச் சென்றது எனவும், அதன் பிறகே கடற்படையினரின் உதவியுடன் தமிழ்க்குழுவால் தனது கணவர் கடத்தப்பட்டுள்ளார் எனவும் ரோகினி தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை வத்தளை, ஹுனுப்பிட்டிய, ஸ்ரீ ஜயந்தி மாவத்தையில் வசிக்கும் கிறீஸ்தோத்திரம் பிரான்சிஸ் சேர்ச்சில் என்ற 49 வயதுடைய தமிழர், இரவு 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் வைத்துத் தாக்குதலுக்கும் விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டு பின்னர் கடத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அதேவேளை இவர் வெளிநாட்டில் தொழில் புரிந்துகொண்டிருந்தபோது 1997இல் ஏற்பட்ட ஒரு வாகன விபத்தில் தனது ஒரு காலை இழந்தவர் ஆவார்.

இச்சம்பவம் தொடர்பாக சேர்ச்சிலின் மனைவி மக்கள் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். அத்துடன், இச்சம்பவம் தொடர்பாக கிரிபத்கொட பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இம்முறைப்பாடு குறித்த மேல் நடவடிக்கைகளுக்காக மக்கள் கண்காணிப்புக் குழுவின் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனக் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டாளர் மனோகணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

(அ-சி)

## உயர்தரப்பரீட்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவியுடன் படகு மூலம் இன்று எடுத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது.

அதே வேளை - நேற்றுமுன்தினம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள்களும் ஜீ.சி.ஈ. (உயர்தர) முதற்கட்டப் பரீட்சை விடைத்தாள்களும் நேற்று விமானம் மூலம் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. (அ-1)

## மின்னல்தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை உழவு இயந்திரம் ஒன்றில் ஆண்டான்குளம் பகுதி ஊடாக இராணுவத்தினர் பயணஞ்செய்தபோது அவர்களை மின்னல் தாக்கியதாகவும் இந்த மின்னல் தாக்கம் காரணமாக நான்கு இராணுவத்தினர் சம்பவ இடத்திலேயே உடல் கருகிய நிலையில் மரணமடைந்ததாகவும் இதில் காயமடைந்த இரணுவத்தினர் இருவர் அவசரமாக அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேர்வினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் மேலதிக நீதிவான் மஞ்சுள திலகரட்ண முன்னிலையில் இவ்விவகாரம் நேற்றுக் காலை எடுக்கப்பட்டபோதே நீதிவான் இந்த உத்தரவை விடுத்தார்.

இந்த விவகாரத்தை ஒட்டிய விடயங்கள் குறித்து பேலியகொடை பொலிஸ் நிலையத்தின் தலைமையக இன்ஸ்பெக்டரைத் துருவித் துருவிக் கேள்வி கேட்ட நீதிவான், அவர் அளித்த பதில்களின் அடிப்படையிலேயே மேற்படி நால்வரையும் உடன் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பணிக்கும் உத்தரவை பொலிஸ் மா அதிபருக்கு விடுத்தார்.

அமைச்சர் மேர்வினுடன் களனி பிரதேச சபை உறுப்பினர் பிரஸன்ன ரணவீர, முஞ்சி நிஹால் எனப்படும் நிஹால் சில்வா, துலான் ஆசிரி ஆகியோரைக் கைது செய்யும்படியே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

## பதவியை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"எனது சட்ட ஆலோசகர்கள், நெருங்கிய அரசியல் ஆதரவாளர்கள் ஆகியோரோடு நான் கலந்தாலோசனை நடத்தினேன். அவர்களின் ஆலோசனைகளுக்கு இணங்கவே பதவியை இராஜிநாமாச் செய்ய முடிவு செய்தேன்." - என்றார் அவர்.

இவர் தாமாகவே பதவியிலிருந்து விலகாவிட்டால் இவருக்கெதிராக நாடாளுமன்றத்தில் குற்றவிசாரணைப் பிரேரணை கொண்டுவந்து அவரைப் பதவியிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்திருந்த ஆளும் கூட்டமைப்பு அதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திய நிலையிலேயே முஷாரப் தமது பதவியை இராஜிநாமாச் செய்தார்.

இராணுவச் சதிப்புரட்சி மூலம் 1999 இல் அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி முஷாரப்பின் ஆட்சி அதிகாரம் சுமார் ஒன்பது ஆண்டு கால ஆட்டத்தின் பின்னர் முடிவுக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வாக்களிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரிக்கவும் தேர்தல் ஆணையாளர் தீர்மானித்திருக்கின்றார் என்று தெரியவருகிறது.

மேற்படி தேர்தல் தொடர்பாக நடத்தப்பட்ட உத்தேச மதிப்பீடுகளின்படி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு இரு மாகாணங்களிலும் வெற்றிவாய்ப்பு அதிகம் இருப்பது தெரியவந்ததை அடுத்து, இந்தத் தேர்தலில் எந்தக் குளறுபடி பண்ணியாவது வெல்ல வேண்டும் என்ற தீவிரத்தில் அரசுத் தரப்பு சட்டவிரோத செயற்பாடுகளில் இறங்கியிருக்கின்றது என்று ஐ.தே.க. செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா எம்.பி. குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசுத் தரப்பு இப்படி வாக்களிப்பு தினத்தில் குளறு படி நடவடிக்கையில் ஈடுபடுமானால் சட்டத்தை மக்கள் தமது கைகளில் எடுக்கும் நிலைமை ஏற்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

இந்தப் பின்னணியிலேயே வாக்களிப்பு நிலையப் பிரதேசங்களை உயர்பாதுகாப்பு வலயமாக்கும் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

## நாச்சிக்குடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினர் கொல்லப்பட்டுள்ளனர். இருபதுக்கும் அதிக மனோர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆட்லெறி மற்றும் வெடிகணைச் சூட்டாதரவுடன் நாச்சிக்குடாப் பகுதி ஊடாகவும் அதனை அண்டிய பகுதிகள் ஊடாகவும் ஞாயிற்றுக்கிழமை படையினர் பாரிய முன்நகர்வினை மேற்கொண்டனர்.

இம்முன்நகர்வுக்கு எதிரான விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதல் நடத்தி படையினரின் நகர்வினை முறியடித்துள்ளனர். (அ-1)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் கவலை தெரிவித்துள்ளன.

இலங்கையில் செயற்படும் ஐக்கிய நாடுகளின் முகவர் அமைப்புகள் நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடரும் மோதல்கள் காரணமாகப் பூநகரி உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த மக்களும் புதிதாக இடம்பெயரத் தொடங்கியுள்ளனர் என ஐக்கிய நாடுகளின் முகவர் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

புதிதாக இடம்பெயர்ந்தவர்களுக்கான புகலிடங்களை உருவாக்குவது அவசியத் தேவையாக உள்ளது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடரும் இராணுவ நடவடிக்கை மற்றும் இராணுவம் முன்னேறுவதன் காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பொதுவான பாதுகாப்பு நிலைமை, பதற்றமான நிலையில் காணப்படுகின்றது.

வடபகுதி-தென்பகுதி முன்னரங்குகளில் இருந்தும் கிளிநொச்சிக்கு தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளில் இருந்தும் இடம்பெறும் இராணுவ நடவடிக்கை காரணமாக இங்கு ஷெல் தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன.

### கடந்தவார மோதல்கள்

கிளிநொச்சி வேளாங்குளத்திற்கு அருகிலும் மல்லாவியின் ஒட்டன் குளம் மற்றும் கல்விளானிற்கு அருகிலும் முல்லைத்தீவின் நாயாறுக்கு அருகிலும் கடந்த வாரம் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

ஸ்கந்தபுரம், அக்கராயன் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல் காரணமாக மக்கள் நடமாட்டம் முடங்கியுள்ளது. வன்னியிலிருந்து வெளியிடங் களுக்கான தொலைத்தொடர்புகள் ஜூலை 23ஆம் திகதியிலிருந்து துண்டிக்கப்பட் டுள்ளன.

ஓகஸ்ட் 11ஆம் திகதி பூநகரியின் வன்னேரிக்குளப் பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல் காரணமாக ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை நிலையங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு மாற்றப்பட்டன.

மாந்தை மேற்கு மற்றும் கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து வன்னேரிக்குளம், அக்கராயன் பகுதியில் தங்கியிருந்த மக்கள் அப்பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல் காரணமாக கிளிநொச்சிக்கும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் இடம்பெயரத் தொடங்கியுள்ளனர்.

### புதிதாக இடம்பெயர்தோருக்கான பாதுகாப்பான புகலிடங்கள் தேவை

இதன் காரணமாக புதிதாக இடம்பெயர்ந்தவர் களுக்குப் பாதுகாப்பான புகலிடங்களே முக்கிய தேவையாகவுள்ளன.

கிளிநொச்சி பிரதேச செயலகத்தின் தகவல்களின்படி முழங்காவிலைநோக்கி இராணுவம் முன்னேறியதைத் தொடர்ந்து, பூநகரி உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, ஜெயபுரம் போன்ற கிராமங்களிலிருந்து 3,100 குடும்பங்களைச் சேர்ந்த 11, 800 பேர் புதிதாக இடம்பெயர்ந்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தின் 12 பாடசாலைகளில் 1,147 குடும்பங்களைச் சேர்ந்த 4,372 பேர் தங்கவைக்கப்பட் டுள்ளனர்.

கிளிநொச்சி சுகாதார திணைக்களத்திற்கான மாதாந்த டீசல் விநியோகம் 6,250 லீற்றர்களிலிருந்து 2,250 லீட்டராகக் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில், கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கான மாதாந்த எரிபொருள் தேவை 15 ஆயிரம் லீற்றராகக் காணப்பட்டது.

இவ்வாறு எரிபொருள் விநியோகம் குறைக்கப்பட்டமையானது அம்புலன்ஸ் சேவையை வழங்குவது, மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்துவது போன்றவற்றில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மோதல் காரணமாகப் புதிதாக இடம்பெயர்ந்தவர்களைத் தங்கவைப்பதற்காக கிளிநொச்சிக்கு வட கிழக்கில் இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன -என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ)

## அக்கரைப்பற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளார் எனவும் நால்வர் படுகாயம் அடைந்தனர் என்று புலிகள் தரப்பில் கூறப்பட்டது.

இத்தாக்குதலை அடுத்து அப்பகுதியில் ஞாயிற்றுக்கிழமை 8.00 மணியளவில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல் கள் தெரிவித்தன.

அன்றைய தினம் கஞ்சிக்குடிச்சாறு வனப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூவர் காயமடைந்தனர். அவர்களில் இருவர் நேற்று உயிரிழந்தனர் என்றும் கூறப்பட்டது.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் இந்தப்படையில் இணைந்துள்ளனர்.

அதேவேளை -

முன்னாள் போராளிகளை மீண்டும் இணையுமாறு விடுத்தவேண்டுகோளை ஏற்று பெரும் எண்ணிக்கையானோர் இணைந்து வருகின்றனர் என விடுதலைப் புலிகள் அரசியல்துறை தெரிவித்துள்ளது.

## மல்லாவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டடத்தில் இயங்கும் இந்த ஆஸ்பத்திரிக்கு தினமும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சென்று சிகிச்சை பெறுகின்றனர்.

(1)

## முன்நகர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினர் காயமடைந்தனர் ஆறு விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்;13 பேர் காயமடைந்தனர் என்று படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

விற்பனையாகிறது
ஒவ்வொரு ராசிக்கும் தனியானயந்திரம்
வளம் பெருக்கும்
வாழ்க்கைக்கு வழிகாட்டுடு
ராசி யந்திரம்
மகிழ்ச்சியான வாழ்க்கை அமைய வேண்டுமா...?
செல்வச் செழிப்புடன் வாழ வேண்டுமா.....?
செய்தொழிலில் செல்வம் கிடைக்க வேண்டுமா...?
குடும்பத்தில் காரிய தடை நீங்க வேண்டுமா....?
நினைத்தது அனைத்தும் சிறப்புடன் நடக்க வேண்டுமா...?
உங்கள் குலதெய்வமே
உங்கள் ராசியின் அதிபதி
இஷ்ட தெய்வத்தை வழிபட்டு தூய மனத்துடன்
இதிலுள்ள சுலோகத்தினை தினமும் தியானித்து வந்தால்
சகல ஐஸ்வர்யங்களும் கிட்டும்.
முக்கிய விவரம்
ராசி அதிபதி | அதிஷ்ட எண்
இஷ்ட தெய்வம் | அதிஷ்டக் கல்
ஸ்சுலோகம் | அதிஷ்ட நிறம்
இவை அனைத்தும் அடங்கியுள்ளது.
தனு, கும்பம், கடகம், மீனம், துலாம், மேடம், மிதுனம், மகரம், சிங்கம், இடபம், கன்னி, விருச்சிகம்

C.G.T
பூபாலசிங்கம், துர்க்கா
ஸ்ரீலங்கா, சுப்பிரமணியம்
புத்தகசாலைகள்.

விற்பனையாகிறது
ESSENTIAL
ENGLISH
GRAMMR-225/=

ACCOUNTING
Cost & Management Accounting.
* English Medium- Sat. & Sun- 10 a.m.
Start on 19.08.08 3p.m.
* Tamil Medium- Tue. & Thu. 4.30 p.m.
Start on 19.08.08 4.30p.m.
By N.SHANKAR B.Com,
H.N.D.A.
Devi Press Lane, Navalar
Road, Jaffna.
T.P.591379

துரித கதியில் ஆய்வுக்கட்டுரை
கணனியில் பிறிண்டிங்
ஆய்வுக்கட்டுரைகள் துரித கதியில் கணனியில் வடிவ மைத்தப் புத்தகமாக்க பதிவுகளுக்கு இன்றே நாடுங்கள். மற்றும் லேசர்கலர் பிறிண், இஸ்கானிங்,[லேசர் பிறிண்- 07/= மட்டும்].
பேப்பர் பதிப்பகம், ராஜ் கொம்பீட்டர் பிறிண்டிங்
இராமநாதன் வீதி, பரமேஸ்வரச் சந்தி, அருகாமை.
பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.08.2008 இல் [illegible] வெளியிடப்பற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org